கோவை முரசு

..கோவைமுரசு, வெளியீடு: ஆசிரியை S.P. மீனாட்சி அம்மாள்..

அறிஞர், டாக்டர் R.K. சண்முகம் அவர்கள்

(நினைவு மலர்)

மலர் 4 | பிப்ரவரி '54 | விலை 8 அணா

ஸ்ரீ கார்த்திகேயா

ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ்

லிமிடெட்

சிங்காநல்லூர் — கோயமுத்தூர்.

★

10912 கதிர்கள்

30 நெ. முதல் 80 நெ. வரை
உயர்ந்த ரக பாவு நூல் உற்பத்தி
செய்கிறோம்.

40 நெ. ஸ்டேபிள் பைபர் நூலும்
உற்பத்தி செய்கிறோம்.

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்.

விபரங்களுக்கு :-

G. ராமசாமி நாயுடு,

கவர்னிங் டைரெக்டர்.

தமிழகத்தின் தலைசிறந்த நாடகம்

மூன்று வருட முயற்சியால்
முத்தமிழ்த் திரைக் காவியமாக -
உருவாகியுள்ளது...



மனோகர் பிக்சர்சாரின்

மனோகரா

(தமிழ்)

டைரக்‌ஷன்
பிரசாத்

தயாரிப்பு
எம். சோமசுந்தரம்

கதை:
நாடகபேராசிரியர்
ராவ்பகதூர் சம்பந்த முதலியார்

பூரண உரிமையாளர்கள்:
ராதாகிருஷ்ண பிலிம்ஸ் லிமிடெட் (தலைமை ஆபீஸ்: ஆலப்புழை.)
(சேர்மன்: S. குமாரஸ்வாமி செட்டியார், ஜவுளி வியாபாரம், ஆலப்புழை, பாம்பே & கொல்லம்)
பிராஞ்சு: கிரீன்வேஸ் ரோட் – சென்னை-28.

RKF LIMITED

திரைக் கதை வசனம்: மு. கருணாநிதி... ஸ்டுடியோ: நெப்ட்யூன்

சிடி கேமரா ஹவுஸ்

(முனிசிபல் உயர்நிலை பள்ளிக்கு எதிரில்)

வெரைட்டி ஹால் ரோடு — கோயமுத்தூர்.

●

நவீன முறையில் குறித்த நேரத்தில் நேர்த்தியாகவும் அழகாகவும், எழில் மிகுந்த வேலைப்பாடுகளுடனும் **போட்டோ — என்லார்ஜ்மெண்ட், கலரிங் வேலைகள்** செய்து கொடுக்கப்படும்.

போட்டோ, ஸ்டுடியோவிற்கு வேண்டிய சகல விதமான சாமான்களும், பல விதமான புதிய **கேமராக்களும், பிலிம்களும்** கிடைக்கும்.

●

V. H. ரோடு,
கோவை.

K. V. ஸ்ரீனிவாசன்,
உரிமையாளர்.

M. C. அப்பாசாமி செட்டி & Co.,

(பிளாக் மேக்கர்ஸ்)

மண்ணடி :: சென்னை-1.

★

போட்டோ, ஆப்டோன் பிளாக்குகள், கலர் பிளாக்குகள், டிராயிங் பிளாக்குகள், குறித்த காலத்தில், நேர்த்தியான முறையில் அழகாகவும், சுத்தமாகவும் செய்து கொடுக்கப்படும்.

★

சென்னையில்

மிகப் புகழ் வாய்ந்த பழமையான

ஸ்தாபனம் இதுவே !

ALL INDIA GENERAL

INSURANCE COMPANY, LIMITED.

Head Office : BOMBAY

★

Total Assets (Exceed) — Rs. 1,04,35,000

Transacts :

LIFE-FIRE-MARINE-MOTOR-Etc.

For Particulars.

(DIVISIONAL OFFICE FOR SOUTH INDIA)

ALL INDIA GENERAL BUILDING
COIMBATORE

P. V. K. SHANMUGAM, B. A.
Divisional Manager

Madras City Office :

29, LINGHI CHETTY STREET, MADRAS-1.

Other Offices at :

ADONI, BANGALORE, CUDDALORE, PALAI (U. S. T. C.)
MANGALORE, MADURAI, RAJAHMUNDRY,
TANJORE, TUTICORIN ETC.

தந்தி : 'வசந்தா' கோயமுத்தூர். போன் : நெ. 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.,

ரிஜிஸ்டர் ஆபீஸ் : சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ் ;

R. K. ஷண்முகம்செட்டி & பிரதர்ஸ்

1934-ஆ கள்ளிக்கோட்டையில் நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காகத் தங்கமெடல் நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல் :

20 நெ. முதல் 44 நெ. வரை ஒற்றை முறுக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லாவிதமான ஜவுளி ரகங்களுக்கும்,

வேஷ்டிகள், லாங்கிளாத், டவல், சர்டிங், மல், கதர் தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கெட்டில் பேர் பெற்றது. 600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக் கண்டு ஏமாருதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்

ஸ்தாபிதம் : 1888.

தி கோயமுத்தூர் ஸ்பின்னிங் வீவிங் கம்பெனி,

லிமிடெட்.,

கோயமுத்தூர்.

த. பெ. எண். 24.

தந்தி : 'ஸ்பின்வீவ்' போன் : 70.

அதிகாரம் பெற்ற மூலதனம்	25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	20,76,900
வேலை செய்யும் கதிர்கள்	72,832
வேலை செய்யும் தறிகள்	407

20 நிர். முதல் 100 நிர். வரை எல்லா ஒற்றை, இரட்டை நூல்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உயர்ந்த ரக வேஷ்டிகள், துண்டுகள், சட்டைகள், துணிகள், லாங்கிளாத்துகள், பனியன்கள் தயாரிக்கப்படுகின்றன.

தென்னாட்டிற்கே முன்னோடியான தொழிற்சாலை,

ஏஜண்ட்ஸ் அண் செகரடரீஸ் :—

மெஸ்ஸர்ஸ்

R. G. S. நாயுடு அண் கோ.

SRI RANGA VILAS GINNING, SPINNING

AND

WEAVING MILLS LIMITED

(Established in 1922)

Registered Office : Peelamedu, Coimbatore

Telegrams " RANGAVILAS" *Telephone No.* 17

●

SPINDLES	...	LOOMS
30,956		88
Authorised Capital	...	Rs. 16,00,000
Subscribed, Called and Paid-up Capital	,,	15,02,500

Yarns of 2s to 80s Carded

GREY GADA & GREY DHOTIES

●

Managing Agents and Bankers:

P. S. GOVINDASWAMY NAIDU & SONS

PEELAMEDU P. O., COMBATORE

இந்தியன் பாங்க்

லிமிடெட்

தலைமை ஆபீஸ் : வடக்கு பீச் ரோட், மதராஸ் - 1.



(ஸ்தாபிதம் : 1907)

தென்னிந்தியாவில் எல்லா முக்கிய இடங்களிலும் பம்பாய் மற்றும் புதுடில்லியிலும் பிராஞ்சுகள் ஸப்-ஆபீஸ்கள் இருக்கின்றன.

வெளிநாட்டுக் கிளைகள் : கொழும்பு, கோலாலம்பூர், மலாக்கா, பினங்கு மற்றும் சிங்கப்பூர்.

மூலதனம்

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வாக்களிக்கப்பட்ட ,,	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட ,,	ரூ.	57,80,000
ரிசர்வு & இதர நிதிகள்	ரூ.	76,00,000
டிபாசிட்டுகள் (31-12-53)	ரூ.	21·85-கோடிகள்

வெளிநாட்டுப் பரிவர்த்தனை உள்பட சகலவிதமான பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படுகின்றன.

உலகின் சகல பாகங்களிலும் நிருபர்களுள்ளனர்.

லண்டன் ஏஜண்டுகள் : வெஸ்ட்மின்ஸ்டர் பாங்க் லிட்.

நியூயார்க் ஏஜண்டுகள் : நேஷனல் ஸிடி பாங்க் ஆப் நியூயார்க்.

N. கோபால அய்யர்,
காரியதரிசி.

மற்றவர் தரும் மதிப்புரைகள்.

RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI
Minister for public works.

Fort St. George,
Madras.
30th Jan. 54.

I am glad that the editor of Kovai Murasu is bringing out a life sketch of the late Dr. R. K. Shanmugham Chettiar. The country knows so much about the Doctor and his services for the country that I need hardly write about him here. I am sure the biography will be welcomed by all and widely read.

I understand that the journal itself is mainly devoted for the social uplift and educational advancement of the backward communities. I wish the journal all successs.

(Sd.) **Raja Sri Shanmuga Rajeswara Sethupathi.**

* * *

P. T. RAJAN, M. L. A.

'Palayam House'
Madurai, 24th Dec. 1953.

To

The Editor, "KOVAI MURASU"
Coimbatore.

It is but fitting that the name of the late Dr. Shunmugam Chetty, a world figure, should be perpetuated. Your effort to bring out a special number of Kovai Murasu is highly commendable. I wish your venture every success.

(Sd.) P. T. Rajan.

Dr. Rm. Alagappa Chettiar,
M. A. D. Litt., LLD.
Barrister-At-Law.

"Krishna Vilas"
Vepery,
Madras, 20th Nov. 53.

The Editor, "KOVAI MURASU"
Coimbatore.

Dear Sir,

I very much appreciate every effort made to perpetuate the memory of Dr. Shanmugam Chetty and my good wishes are with you in your endeavours for this cause in Tamil Nad.

With best wishes.

Yours faithfully,
(Sd.) Rm. Alagappa Chetty.

* * *

கனம் ராஜாஜி வாழ்த்து !

Chief Minister of Madras,

Madras,
22 January 1954.

ஆசிரியர் "கோவை முரசு" கோவை.

என்னுடைய "ஆசி" வேண்டும் என்று கேட்கிறீர்கள். ஆசிகள் பெறுவதில் நம்பிக்கையிருந்தால் சுவாமியிடம் கேட்டு அருள்பெறுங்கள். பத்திரிக்கையை நல்ல முறையில் நடத்த ஆண்டவன் அருள்வானாக.

இங்ஙனம்,
இராசகோபாலாச்சாரி.

* * *

Jothi Vencatachellum,
Minister For Prohibition,

Madras,
21 December 1953.

ஆசிரியர் "கோவை முரசு" கோவை.

கோவையிலிருந்து வெளியாகும், "கோவை முரசு" என்னும் பத்திரிகை. பல அரிய பெரிய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறது என்றறிய மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இப்பத்திரிகை ஆண்டு மலர், அறிஞர் R. K. சண்முகம் செட்டியார் அவர்களின் நினைவு மலராக வெளி வருகிற தென்பதை அறிய மிகவும் மகிழ்ச்சி. இப்பத்திரிகை, சமூக சீர் திருத்தம், மாதர் முன்னேற்றம், அரிஜன முன்னேற்றம், ஆகியவைகளுக்கு அரிய தொண்டாற்றி சிறப்புற்று விளங்க எனது பிரார்த்தனைகள்.

இங்ஙனம்
ஜோதி வெங்கடாசலம்,
(சென்னை மதுவிலக்கு மந்திரி)

சென்னை சட்டசபை சபாநாயகர் வாழ்த்து!

சென்னை,
11—1—1954.

ஆசியர் "கோவை முரசு" கோவை.

"கோவை முரசு" ஆசிரியர் திரு. S. A மாணிக்கம் அவர்கள் காலம் சென்ற சர். சண்முகம் செட்டியாருடைய வாழ்க்கையைப்பற்றி புத்தக ரூபமாக ஒரு பிரசுரம் செய்வதைக் கேள்விப்பட்டு சந்தோஷப்படு கிறேன். காலஞ் சென்ற திரு செட்டியார் அவர்கள் பலவிதத்திலும் அரசாங்கத்திற்கும் பொது ஜனங்களுக்கும் பாடுபட்டவர். அவருடைய வாழ்க்கையை எல்லோரும் தெரிந்துகொள்வது அத்யாவசியம். திரு S. A. மாணிக்கம் அவர்களுடைய முயற்சியை நான் பாராட்டுகிறேன், அதை ஜனங்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்.

ஒப்பம்,
ஜெ. சிவசண்முகம் பிள்ளை.

* * *

C. Subramaniam,
Minister For Finance,

Fort. St. George,
Madras.

திரு, ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு கொண்டபுத்தகம், ஒன்றை "கோவை முரசு" ஆசிரியர், எஸ். ஏ. மாணிக்கம் அவர்கள் வெளியிட முன்வந்திருப்பதை அறிந்து, மகிழ்ச்சி யுற்றேன்.

திரு, செட்டியார் அவர்கள் நம் நாட்டிற்குச் செய்த சேவை யாவரும் அறிந்ததே. சுதந்திர இந்தியாவில் முதல் நிதி மந்திரியாக இருந்து திறமையுடன் நிர்வாகத்தை நடத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாக திரு செட்டியார் அவர்கள் தமிழுக்கும், தமிழிசைக்கும் செய்த சேவைக்காகத் தமிழர் என்றும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளார்கள்.

இங்ஙனம்,
சி. சுப்பிரமணியம்.
28—12—53.

"கோவைமுரசு"

(சிறந்த மாதப் பத்திரிகை)

மடமையை மாய்த்து நாளும் மனிதரை மனிதராக்கி
மானிலத் தெங்கும் நாங்கள் மன்னராய் வாழ்வோம் என்றும்

மலர் 4	பிப்ரவரி 54	இதழ் 2

அறிஞர்

டாக்டர் R. K. சண்முகம் அவர்கள்
(நினைவு மலர்)

ஆங்கிலப் பேரகராதியைத் தொகுத்தளித்த உலக அறிஞர் சாம்யுவல் ஜான்சன் இறும்பூதெய்தினர்; "ஒரு நாள் காலை கண் விழித்தேன், நான் மேதையா யிருப்பதைக் கண்டேன்" என்பதாக, ஏன்? இவர் மேதையான வாழ்க்கை வரலாறு பெரும் சோகச் சித்திரம்.

அறிஞர், R. K. ஷண்முகம்

உலகக் கலைஞர்கள், அரசியல் மேதைகள், சமுதாய சீர்திருத்தச் செம்மல்கள் வாழ்க்கை- அவர்களது பொது நலத் தொண்டின் பாதை ஒரு போராட்டக் களம். தென்றல்துள்ளி வர வேற்று அழைத்துச் செல்லும் இன்பச் சோலை யாகவோ, பச்சைப் பசும் புல் பரவிய பாதை யாகவோ இருந்ததில்லை. உலகப் பெரியார்கள் அனைவரின் வாழ்க்கை வரலாறுகள். முட்காடுகள், எதிர்ப்பு அனல்கள், வறுமைச்

சூறுவளிகள், அவல வாழ்க்கை நிறைந்ததாகவே இருந்திருக்கின்றன. இது தான் சரித்திரம் காட்டும் பாடம்.

இதற்கு விதி விலக்கானவர்கள் மேலை நாட்டிலே காணோம். ஆனால் உலகில் முதல் மனித இனத்தைப் பெற்றெடுத்த நந்தமிழ் நாடு, இத்துறையிலும் புதுமைச் சிறப்புப் பெற்றுள்ளது-அறிஞர் சண்முகம் அவர்கள் மூலம்.

கருவிலே திருவுடையார் என்கின்றனரே உலகானுபவப் பெரியோர்கள் அந்தச் சிறப்புக்குரியவர் நமது தூய தமிழ்ச் செம்மல் சண்முகம். அறிவையும், ஆட்சி ஆற்றலையும் இவர் தேடிப் போகவுமில்லை. அதற்காகப் பாடுபடவுமில்லை. பணக் காணிக்கைகளைக் கையிலேந்திச் சென்றும், உயர்ந்தோன் சிபார்சு கோபுர மாளிகைகள் ஏறியும் நாடிச் செல்லவில்லை. பிறப்பிலே இயல்பாக அமைந்து விட்டது இவருக்கு அறிவும் ஆற்றலும் ஆட்சித் திறனும், மேதைச் சிறப்பும், "அறிவுடையார் எல்லாம் உடையார்"- என்ற பொய்யா மொழிக்கு இணையற்ற உதாரணம் நம் கொங்கு நாட்டு மேதை. எல்லாச் சிறப்புக்களும் இவரைத் தேடி வந்தன. தேடி வந்தளித்தனர் நாடாள்வோறும், உலக மேதைகளும், பதவிகளை இவர் தேடித் தவங்கிடக்கவில்லை, பதவிகள் இவரை நாடி வந்தன. தடுத்தாட்கொள்ளும் தகுதி பெற்ற செங்கோலராக இவரை மதித்து, ஒப்புயர்வற்ற அறிவொளி, கலங்கரை விளக்கம் போல் வழிகாட்டிற்று, மீளக்கரை காட்டிற்று அரசியல், சமுதாயக்கடலிலே பட்டுத் தவிப்போர்க்கு.

உலக ஜோதியாக விளங்கிய கலங்கரை விளக்கம், தேன் நீர் தமிழ் வள நாட்டுத் திருவென விளங்கும், தென் கொங்கு நாட்டின் தலை நகர் பெற்றளித்த மாசற்ற மாணிக்கம், கடந்த மே மீ (1953) ஐந்தாம் நாள் வரை தான் தனது எச்சமில்லா மதிவொளியைப் பரப்பிக்கொண்டிருந்தது மாநிலத்தார் மகிழ.

மறைந்தது ஒளி :

செந்தமிழ்ச் செல்வம், செழிந்த நிதியியல் அறிவொளி, நாடாளும் திறன்மதி, ஆங்கிலப் புலமைச் செம்மல், இருமொழி (ஆங்கிலம், தமிழ்) சொற்பொழிவுச் சிங்கம்; அவையஞ்சா சொல்வல்ல அரசியல் மாணிக்கம், அந்தோ! மறைந்தது, மறைந்தது திடுமென. தனித்தமிழ் வேட்கை கொண்ட தகை சான்ற ஒண் மணி மறைந்தது இவ்வாண்டு மே திங்கள் ஐந்தாம் நாள். மறைந்தது மாமணி. இனி

உலகோர் கண்ணுற்காண வியலாது. ஆயினும் அந்நன்மணி பரப்பிய - வீசிய மாசற்ற ஒளி மறையவில்லை - மறையாது, மறையாது இன்றும் என்றும் அறிவுலகம் உள்ள வரையில். கொங்களித்த கோதகன்ற அம்மாணிக்கம் - தூயதமிழ்க் கெழுதகை - நிகரில் அரசியல் வல்லாளர் - இந்திய நாட்டின் தனிச் சிறப்புரிமையும், உலகப் பொதுச் சிறப்புரிமையான இணையில்லாப் பொருளாதாரப் புலவர், பொருளாதார உலகுக்குப் பேராசிரியர், உலக மேதை, அறிஞர் இரா. க. சண்முகம் அவர்கள், ஆறு பத்து ஆண்டு வயதினைக்கடந்து ஆண்டொன்று தானாகிறது. மேதைச் சிறப்பு முழுமை பெறும் வயதிது - பிரிந்தார் - பிரிந்தது அவரது பூத உடல் நம்மை விட்டு. மாமணியை மண்ணுண்டு மறைத்து விட்டது. ஆயினும் இவ்விசித்திர, வித்தகமணி பரப்பிய அறிவொளி உள்ளது. உள்ளது இன்றும் எங்கும் பரவி. திரு உருவம் இல்லைதான் - நிழல் இருந்து வருகிறது. மலரில்லை; ஆயின் அது வீசிப் போந்த மணம் இன்னும் கமழ்கிறது, தென்றல் போல எங்கும் படர்ந்து.

பொதுப்பணி :

முப்பது ஆண்டுகளுக்கு மேல் அறிஞர் சண்முகத்தின் அறிவை, ஆற்றலை, அவ்வழி ஆக்கத்துறைப் பணியை - இந்திய நாடு பயன் படுத்திக் கொண்டது - நற்பயன் பெற்று வளமுற்றது. நாட்டு விடுதலைப் போராட்டத்துடன் துவக்க மாயிற்று இம்மா வீரரின் அரசியல் வாழ்க்கை. ஆயினும் அக் காலத் தேசியக் கோட்டத்தின் சூழ்நிலை - போக்கு, நடப்பு, இந்த ஆக்கமதி மன்னனுக்கு ஒத்து வரவில்லை. கருத்து மாறுபாடு கண்டது. எனவே அத்தேசிய சபைத் தொடர்பினின்றும் பிரிந்தார். தனித்துப் பொதுப் பணியாற்றினார். நன்மணச் சந்தனம், நடுக்காவிலே மறைந்திருக்க விடுமா அதன் பயனறிந்த உலகம்? நன் முத்துக்கு எவ்வளவு மதிப்புண்டு. நாடிவருவர் அதன் மதிப்பறிந்த பல்லோரும். "தேசியம்" இவரது அறிவுத்துணையை இழந்தது. ஆயினும் இந்நாட்டிலும் தலைமைத்துரைத்தனம் - இம்மாமணியின் மதிப்பறிந்து, பறந்து வந்து பயன் படுத்திக் கொண்டது. அத்துடன் இவரது சிறப்பை உலகறியவும் வாய்ப்புக் கிடைத்தது. ஆட்டோவாவில் நடந்த உலக மகாநாட்டிலே இவர் இந்தியாவின் குரலை முழக்கினார் - உலக மேதை எனப் பாராட்டுதலையும் பெற்றார்.

தமிழ் கலைச்சொல் வளமற்றது. அரசியல், பொருளியல், விஞ்ஞான இயல் சொற்கள் அதில் பஞ்சம் எனச்சில ஆங்கிலப்

பட்டதாரிகள், தங்கள் தாய் மொழியைத் தாழ்த்தித் திரிந்த காலம். இந்தக் குறைபாடு ஆதாரமற்றது. விளக்கமறியாக் கத்துக்குட்டிப் பேச்சு - கன்னித்தமிழிலே பல்வளமும், பல் பொருள் சொற்களும் உண்டு என்று உலகறியச் செய்த பேரறிஞர்கள், தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும், அரசியல் அண்ணல் சண்முகம் அவர்களுமேயாவர். ஆட்டோவா மகா நாட்டுக்குச் சென்று திரும்பியபின், அம்மகாநாட்டு நிகழ்ச்சி பற்றிப் பொது அரங்கங்களிலே, கலா சாலைகளிலே ஆற்றிய சொற்பொழிவுகளில் கலப்பற்ற கன்னித் தனித்தமிழ் சொற்கள் முத்துக் கோவை போல் காட்சியளித்தன. உலக மேதை எனப் பாராட்டுதலையும் பெற்றார். அடுத்து வந்தது ஆட்சித் துறைச் சிறப்பும், கொச்சி நாட்டின் திவானாகி - நாடாளும் வல்லுநர் எனப் புகழப்பட்டார் - பரம்பரை ஆட்சி மேதைகளும் திகைக்க.

இந்தியநாடு விடுதலை பெற்றது - ஆட்சித்துறைப் பயிற்சி தமக்குக் குறைவே என ஏங்கினர் சுயாட்சிப் பொறுப் பேற்றோர் - வழியொளியைத் தேடினர். தென்னாட்டிலே ஓய்வு பெற்றிருந்த அரசியல் துருவ நட்சத்திரத்தின் உதவியை நாடினர். பொதுப்பணியே தன் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்ட கோவை மன்னரும் இணங்கினார். இந்தியத் துணைக் கண்டத்தின் சுயாட்சிப் புது நாட்டின் முதல் நிதியமைச்சரானார்.

அக்காலத்தில், பெரும் சிக்கலில் இருந்தது, பிரிட்டன் - இந்தியா கொடுக்கல் வாங்கல் கடன்கணக்கு. நம்மேதை அனுப்பப்பட்டார் இங்கிலாந்துக்கு இச்சிக்கலைத் தீர்த்துவர. கணக்கை ஒழுங்கு செய்துவந்தார். தமது நுண்ணறிவால் இந்தியாவுக்குச் சாதகமான முறையில் இப்பணியிலிருந்து நீங்கி ஓய்வுகொண்டார். ஆனால் மக்கள் நலமெய்த வழி காட்ட வல்லாரைச் சும்மாவிட்டு வைக்குமா நாடு? அடுத்து பயன்படுத்திக் கொண்டது. இவரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக்கி. இப்பதவியில் வல்லார் - நல்லார் இவருக்கு ஈடாக இதற்குமுன் யாரும் இருந்ததில்லை என ஆட்சியாளரால் மாத்திரமின்றி, மாணவ மணிகளாலும் போற்றப் பெற்றார்.

நாட்டு நலங்கருதி - தாயகமக்கள் நல்வாழ்விற்காக இவர் வகித்த பதவிகள் பல திறத்தன. அத்தனையிலும் தீரர் சண்முகம் வாகை சூடியவர்.

தாய்த் தமிழ்ப் பற்று :

தமிழர் வாழ்வு மேம்பட வேண்டுமெனில் - அறிவியலிலே நாட்டியலிலே பிறர் ஆதிக்கம் அகல வேண்டுமாயின், தாய்த் தமிழ்மொழி தழைக்க வேண்டுமென்ற தணியா ஆர்வம் மிக்குற்றவர் இம்மதிவாணர். இவ்வார்வத்தைச் சொல்லில் மாத்திரமன்றிச் செயலிலும் காட்டினர். இயற்றமிழ் செழிக்க வசந்தமெனும் திங்கள் வெளியீட்டைத் தோற்றுவித்து - தாமே இனிய நடையில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி - தாமே நேரில் கண்காணித்துப் பதிப்பித்து வெளியிட்டு, முத்தமிழ் செல்வமாம் சிலப்பதிகாரத்திற்குத் தாமே எளிய நீரருவி நடையில் உரைகண்டார். மற்றும் பூம்புகாரிலே சிலப்பதிகார மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்து, அதனைச் சிறப்புற நடத்தித் தந்த பெருமையும் பல்கலைச் செல்வர் சண்முகம் அவர்களையே சாரும். இறுதிக்காலத்திலே திருக்குறளுக்கு விளக்கம் வரைய முற்பட்டார். ஆயினும் இவரது முடிவு அந்த இலக்கியப்பணி முடிவுறுது செய்துவிட்டது.

தமது நண்பர்களும் தனித்தமிழிலேயே உரையாடச் செய்ய வேண்டுமென்று அதற்கான வழியும் வகுத்து நடத்தியவர். கோவை காஸ்மாபாலிட்டன் கிளப்பில் உண்டிவைத்து தண்டம் வசூலித்தார். ஆங்கிலம் கலந்து பேசிய நண்பர்களிடம். இயல் தமிழுடன் இவரது பணி எல்லைகட்டிக்கொள்ளவில்லை. இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே நாடகத் தமிழ் வளத்திலும் அக்கரை கொண்டார். நாடகத் தமிழ் செழிக்க வழி வகுத்தளித்தார் ஈரோட்டு நாடகக்கலை மகாநாட்டிற்குத் தலைமைதாங்கி, நாட்டியக்கலை முன்னேற்றத்திலும் கருத்துச் செலுத்தினர். மற்றும் இசைத்தமிழ் வளர்ச்சிக்காக அண்ணுமலை அரசரும் இவரும் இணைந்து தமிழிசைச் சங்கத்தை நிறுவினர், தனித்தம்ழிசைக்கும் வழி செய்தனர்.

"இந்திய கிளாஸ்டன்"—என்று மேலை நாட்டாரின் புகழ் மாலையைப் பெற்று ஒப்பற்ற பொருளாதார சரித்திரப் புலவராகத் திகழ்ந்த அரும் பெரும் மாணிக்கம்—செம்மல் சண்முகம் இன்று நம்மிடையில்லை. இதனை நினைத்தால் நெஞ்சம் குமுறுகிறது—துயரகீதம் ஒலிக்கிறது. கலைச்சிற்பியான இவருடைய சேவையைத், தமிழும் தமிழகமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய இப்போதைய சூழ்நிலையிலே, அவரது அநுபவ அறிவுதவி இன்றியமையாது வேண்டப்படுகின்ற இந்த நிலவரத்திலே, அவர் மறைவு, நமக்கும் நம் நாட்டாருக்கும் பெரும் நஷ்டமாகும். மொழி வழி மாநிலம் பிரியும் தருணத்திலே ஆட்சி அநுபவ மேதை—நிகரில் ஆற்றலினரான

இவரின் அறிவின் சக்தியை—நிர்வாக பக்க பலத்தை நம் தமிழ் நாடு இழந்து விட்டது.

மரணம் தவிர்க்க முடியாததுதான்—பிறந்தோர் இறப்பதும் இயற்கையின் நியதியே!

சாதாரண மக்கள் இறப்பினும், மனித பலத்தில் ஒன்று குறைந்ததே எனத் துக்கமுறும் நாம், புதிய தமிழகத்திற்குப் புத்தொளிதரும் ஒப்புயர்வற்ற சமுதாயச் செம்மலை—பேரறிவுக் களஞ்சியத்தை—மக்கள் நல்வாழ்வுக்காக வளத்தை நல்ல சமயத்திலே, கால வோட்டத்திலே கரைத்து விட்டால் எவர்க்குத்தான் மனம் அமைதி கொள்ளும்? ஆயினும் மேதை சண்முகத்தின் வாழ்வு, உள்நாட்டு வரலாற்றுப் பொன்னேட்டிலே இடம் பெற்று விட்டது. அவரது பொதுநலப்பணிகள் சாகாவரம் பெற்று விட்டன.

"தோன்றிற் புகழொடு தோன்றுக"—என்ருர் பொய்யாமொழியார். இவர் புகழோடு தோன்றினர்—புகழ் இவருடன் தோன்றிற்று. அறிவுற்ற பருவம் முதல் இறுதி வரை, இவரும் புகழும் இரட்டைக் குழந்தைகள்—மணியும் ஒலியும் போல வாழ்ந்தார் புகழுடன், இறந்த பின்னும் மங்காப் புகழ் எய்தி வருகிருர். அவர் இதுவரை ஆற்றிய ஒப்பில் பணிகளாலும், இனிமேல் நீடித்திருக்கும்படி செய்து சென்ற பொது நலப் பணிகளாலும்.

ஆட்சி சபையிலே:

சட்டக் கல்லூரி பயிலும் போதே இளவல் சண்முகம், அரசியலிலே—ஆட்சித்துறை மண்டலத்திலே பிரவேசித்தார். கல்லூரி மாணவர், கோவை நகரசபை அங்கத்தினர். அடுத்து சென்னை மாகாண சட்டசபை உறுப்பினர். (பழைய எம். எல். சி.)—மந்திரியாருக்கும் அருந்துணைச் செயலாளர். அறிவுப் பரிதியின் ஒளி மாகாண மண்டலத்துடன் அமையவில்லை. டில்லி மாமண்டல சட்ட சபையிலும் இடம் பெற்ருர்—அந்த இந்திய சட்ட சபையின் தலைவருமானுர். சட்டசபை நிர்வாக கேசரி என்று மாற்றுக் கட்சியாராலும் போற்றப்பட்டார்.

அதன்பின் ஓய்வு விரும்பினுர். ஆனுல் இவரது அறிவுதவி, அவசரத் தேவையாயிற்று ஆட்சியாளர்களுக்கு. இவ் வணிக மன்னரை—கைத்தொழில் வல்லுநரை காப்பு வரிக் கழகத் தலைவராக்கினர்.

சமுதாய சீர்திருத்தப்பணி:

பெரும்பாலான அரசியல் தலைவர்கள் அரசாங்கக் கோட்டைகளிலே அலங்காரச் சீமான்களாக இருப்பதிலே

அதிக விருப்பங் கொண்டவர்கள். பொது ஜனத் தொடர்பும் - சமூகப் பணியில் நேர்முகமாக ஈடுபடுதலும் தங்கள் கவுரவத் துக்கே குறைவென எண்ணங் கொண்டிருந்த காலம் அது. புத்துலக அரசியல் இளம் சிங்கமாகத் திகழ்ந்த அந்தத் துவக்க காலத்திலேயே இவர் சமுதாயச் சீர்திருத்தப் பணி களிலும் ஈடுபட்டார். சமுதாய சீர்திருத்தக்காரர்களுக்கு அரசியல் ஏணி இடம் கொடுக்காத காலத்தில் இவர். அத் துறையில் ஈடுபட்டார். துணிவுடன் - பிறர் எதிர்பார்ப்பதற்கு மாருக, இச்சமுதாயப்பணி இவரது அரசியல் வாழ்வுக்கும் நற்றுணையாயிற்று.

உயரெண்ணங்கள் மலரும் அறிவுச் சோலையாய்த் திகழ்ந்த கலைஞர் சண்முகம் அவர்கள் சுயமரியாதைச் சங்கத் தில் சேர்ந்து ஆற்றிய பணி சமுதாய சீர்திருத்த சரிதத்தில் போற்றுதலைப் பெற்றதாகும். விருதுநகர் சுயமரியாதை மகா நாட்டிலே தலைவர்; ஈரோடு சுயமரியாதை மகா நாட்டிலே வர வேற்புக் குழுத் தலைவர். பெரும் மேதையான இவருடைய ஆதரவும் உழைப்பும் கிடைத்ததால், சுயமரியாதைச் சங்கமும், அச்சங்கம் மேற் கொண்ட சமுதாய சீர்திருத்தப்பணியும் பெரும் சிறப்பும், பெருமித ஆதரவும் விரைவில் பெற்றன. பத்தாண்டுகள் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார் இவர் இப்பணி யில். அரசியல் பெருங்களம் இவரது உதவியை நாடி முழு அளவுக்குப் பயன் படுத்துக் கொண்டதால், இவர் இச்சமூகப் பணியில் அதிகம் நேரிடையாகப் பின்னர் ஈடுபட வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆயினும் சட்ட நிரூபண மண்டலத்திலே கலாமண்டலத்திலே இப்பணியைத் தொடர்ந்து செய்துதான் வந்தார். தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட பழங்குடி மக்களும் இவரால் பல வகையிலும் பெரும் பயன் பெற்று வந்துளர்.

நண்பர்கள் :

ஊராள-நாடாள-உலகாள புதுமைகள் கண்டு நடத்து விக்க உலக நாடுகளிலே தலை சிறந்த அறிஞர்கள் கூடிக் கழகங் கள் ஏற்படுத்திக் கொள்வதுண்டு. மேனுடுகளிலே, விஞ்ஞான- இலக்கிய - பொருளியல் - தொழிலியல் புலவர்கள் தத்தமது கலை வளத்துக்காக இத்தகைய "சங்கப் பலகை" அமைத்துக் கொள்வர். இதே போல் தமிழ் நாட்டு - கலை - தொழில் - பொருளியல் மேதைகள் கழகமாக விளங்கிற்று. கோவை காஸ்மாபாலிட்டன் கிளப். இதன் தலைவர் ஆர். கே. எஸ். அவர்களே ஆதலின் இதனை ஆர். கே. எஸ். கழகம் என்னும் சிறப்புப் பெயரால் அழைப்பதுமுண்டு. இந்தக் கழகத்தின் உறுப்பினரும் திரு. ஆர். கே. எஸ். அவர்களின் உழுவலன்பர்

கள் - தோழர்களில் முக்கியமானவர்கள் தாம் கோவை தொழில் - வர்த்தக உலக மன்னர்கள்.

திரு ஆர். கே எஸ். அவர்களின் அருந்துணை நண்பர்களில் முக்கியமானவர்கள்; ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள், கைத்தொழில் துறை-பணத்துறை நிர்வாக நிபுணர் உயர்திரு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்கள், தொழில் மன்னர் உயர் திரு ஜி. டி. நாயுடு அவர்கள், கொடை வள்ளலும், தயாள சிந்தையருமான டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள், இந்திய சர்க்கார் வியாபார முற்போக்குக் கமிஷன் (Forward Markets Commission, Govt. of India) தலைவர், உயர்திரு பி. வி. நாராயணசாமி நாயுடுகாரு அவர்கள், உயர்திரு. வி. பழனிசாமி நாயுடு அவர்கள் முதலியோராகும்.

குடும்பம் :

ஆர். கே. எஸ். அவர்களின் தகப்பனார் திரு. கந்தசாமி செட்டியார் அவர்கள். அவர் பாட்டனார் இராமசாமி செட்டியார் அவர்களே ஆர். கே. எஸ். அவர்களின் சிறப்புக்கு ஊக்கச் சக்தியாய் இருந்தவர். தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டு, பெற்ற பொழுதின் பெரிதுவக்கும் அன்னையார் திருமதி சிரங்கம்மாள், தந்தையும் தாயுமாக இருந்து, தன் சீராளனை உலக ஜோதியாக்கிய பெருமை இப்பெருமாட்டிக்கே உரியதாகும். அடக்கத்தின் பெட்டகம் - தரும சிந்தையர், மனைவியார் திருமதி ராஜம்மாள். குழந்தைகள் பெண் மக்கள் மூவர், செல்வியர் சாவித்திரி, சரஸ்வதி, ஜானகி.

திருமதி சாவித்ரி - சண்முகம் :

பொது நல வள்ளலான புகழ் தந்தைக்கேற்ற குமாரத்தி —பொதுப்பணி வாரிசு, பொறுப்பாளர் முதல் குமாரத்தி திருமதி சாவித்திரி அம்மையார். இவரது மணாளர் திரு சண்முகம் அவர்கள். கருத்திணைந்த இல்லற நல்லறத் துணைவர்களிருவரும்.

செல்வி சாவித்திரியார், தந்தையாரைப்போன்றே நல்லறிஞர். பொதுப்பணி ஆர்வம் மிக்கார் சிறு வயதின் போதிருந்தே இப்போது செஞ்சிலுவைச் சங்கம் கோவைக் கிளையின் செயலாளர். பெண் உலகுக்கு நல்வழி காட்டும் சேவா சங்கத்தின் துணைத்தலைவர். பெண்கள் அனாதை விடுதி காரியதரிசி. தந்தையாரைப் போன்ற அரசியல் பணியிலும் இவருக்கு ஆர்வமுண்டு. கோவை நகரசபையில் விரைவில் இடம் பெறக் கூடியவர் — தலைவராகவும் தகுதி பெற்றவர்.

திருமதி, சாவித்திரி அம்மையார். திரு. A. சண்முகம் B.A. அவர்கள்

திரு. ஏ. சண்முகம், பி. ஏ. தொழில் நிர்வாக வல்லுநர். சிமிட்டி மார்க்கட்டிங் கம்பெனி மானேஜர். கோவை வர்த்தக சபை துணைத்தலைவர். சென்னை பல்கலைக்கழக செனட் அங்கத்தினர். இந்தியன் பேங்க் கவுரவ ஆலோசகர். புகழ் வாய்ந்த மாமனாரின் சரிநிகர் வாரிசுதாரராகத் திகழ்கிறார். திரு. அ. சண்முகம் அவர்களும் இத்துறையில். மற்றும் தொழில் நிர்வாகத் துறையில் மேனாட்டு அநுபவம் மிகப் பெற்றவர். இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து முதலிய தொழில் வள நாடுகளிலே சுற்றுப்பிரயாணம் செய்து, ஆங்காங்கு தொழில் ரகசியங்களை, நிர்வாக முறைகளைக் கற்றறிந்து வந்தவர்.

திருமதி சரஸ்வதி - கிருஷ்ணசாமி :

இரண்டாம் குமாரத்தியார் செல்வி சரஸ்வதியின் கணவர், திரு. அ. கிருஷ்ணசாமி அவர்கள், திரு. அ. சண்முகம் அவர்களின் இளவல். இவர் இப்போது பர்மாஷெல்கம்பெனி கோவை ஏஜண்ட்டாக உள்ளார். மற்றும் பற்பல பொது நலக் கழக அங்கங்களிலும், நிறுவனங்களிலும் உறுப்பினராகத் திகழ்கிறார். பொது மக்கள் நலனுக்காகத் தன்னலமற்ற துறையில் பணியாற்றி வருபவர். பொது மக்களின்

திருமதி, சரஸ்வதி அம்மையார்,



திரு. A. கிருஷ்ணசாமி அவர்கள்

ஆதரவையும் செல்வாக்கையும் பெரும் அளவுக்குப் பெற்றவர். மற்றும் சண்முகா தியேட்டர்ஸ் மானேஜிங் பார்ட்னர் (நிர்வாகக் கூட்டுப் பொறுப்பாளர்) கிருபாகரா பாங்க் டைரக்டர், கோவை ஜில்லா சாரண சங்கத் துணைத் தலைவர்.

செல்வி சரஸ்வதி—கிருஷ்ணசாமி, இருவருக்கும் ஆண் குழந்தைகள் இருவர். செல்வி சரஸ்வதியின் மீது ஆர். கே. எஸ். அவர்களுக்கு அலாதியான பிரியமும், வாஞ்சையும் உண்டு. அவரது குணநலனும், வெடிப்பான பேச்சும், விநயமான, காரிய வாதமான பேச்சும், நடத்தையும் இவைகளே தகப்பனாரின் சிந்தையைப் பெரிதும் கவர ஏதுவாயிற்று. அவரது குணநலனுக்கேற்றார் போல் அவரது குழந்தைகள்—இளவல்கள் இருவரும் மதி நுட்பமும், அறிவுத் திறனும், பெற்றவர்களாய் இவ்வளவு இளவயதிலேயே திகழ்கிறார்கள் என்பதைத் திரு. டி. கே. எஸ். சகோதரர்கள் வாயிலாகக் கேட்டு பெருமிதம் கொண்டோம். ஆர். கே. எஸ். அவர்களின் பேரப்பிள்ளைகள் தன் பாட்டனாரின் பெயரை எடுத்து அவ்வளவு நற்கியாதியும் அடைய வாய்ப்புப் பெறுவார்கள் போலிருக்கிறதே என்று மட்டற்ற மகிழ்ச்சி கொள்ள வாய்ப்பளிக்கிறது. டி. கே. எஸ். சகோதரர்கள் கூறிய சம்பவ நிகழ்ச்சி இதுதான்;



K. பாலசண்முகம் (ரத்தினம்) K. ஜெகதீஸ்

செல்வி சரஸ்வதி - கிருஷ்ணசாமியின் இளவல்கள் இருவர் - கே. பாலசண்முகம் (ரத்தினம்) கே. ஜெகதீஸ். ஜெகதீசுக்கு வயது சுமார் 7 இருக்கும். டி. கே. எஸ். சகோதரர்களால் நடிக்கப்பட்ட "அந்தமான் கைதி" நாடகத்தைப் பார்த்தாராம். மறு நாள், அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அந்த நாடகத்தில் தான் கண்ட விறகு வெட்டும் காட்சி நினைவுக்கு வர திரு டி. கே. சண்முகத்திடம், "ஏன் அண்ணு, நீங்கள் தினம் இரண்டு விறகு வீதம் வெட்டுகிறீர்களே ஒரு மாதத்திற்கு வெட்டினுல் எவ்வளவோ விறகு ஆகுமே அப்போது அதற்குக் கொடுக்கும் கூலி மீதிதானே" என்று கேட்டாராம். இந்தப் பிஞ்சு மூளையில் பொருளாதார நுண்ணறிவு எவ்வளவு இடம் பெற்றுள்ளது பார்த்தீர்களா என்று அவரே வியந்துவிட்டாராம், இதை அவரே சொல்லக் கேட்டோம். அவர்கள் குடும்பத்துக்கே செல்லப் பிள்ளைகளான இவர்கள் பிற்காலத்தில் எவ்வளவு மேதாவிலாசமும் அறிவுத்திறனும் பெற்று விளங்கப் போகிருர்களோ யார் கண்டது. அவர்கள் நிச்சயம் மேதையாவார்கள் என்பதற்குரிய அறிகுறிகள் இப்போதே காணப்படுகிற விநோதம் நிகழ்கால முன்னறிவிப்பு என்பதில் என்ன தடை.

திருமதி, ஜானகி அம்மையார்,



M. ராமசாமி அவர்கள்,

திருமதி ஜானகி - ராமசாமி :

மூன்றும் புதல்வியர் செல்வி ஜானகி அம்மையாரின் இல்லறத் துணைவரான திரு எம். இராமசாமி பி. எஸ். சி. (Tech. A. M. C. T.) வசந்தாமில்ஸ் ஸ்பின்னிங் இலாகா மானேஜர். இங்கிலாந்து அமெரிக்கா முதலிய பல மேனுடுகள் சென்று, நூல் நூற்றல் கலைப் பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர். தொழிலாளர்பால் அன்பு கொண்டவர். இன் சொல்லாளர். பொதுநலப் பணியில் மிகுந்த ஆர்வம் மிக்கவர். பரோபகார சிந்தை கொண்டவர்.

"காட்சிக்கு எளியன், கடுஞ் சொல்லன் அல்லன்" எனவே இவரை "மீக்கூறும்" தொழிலாளர் உலகம்.

திருமதி ஜானகி அம்மையார் ஆங்கிலம் தமிழ் இரு மொழிகளும் நன்கு பயின்று தேர்ந்தவர். அடக்கமும் பொறையும் அன்பும் நிறைந்தவர். ஆண், பெண் குழந்தைகள் உண்டு. பொதுப்பணியில் ஆர்வமுண்டு. எனினும் குடும்ப நிர்வாக காரியங்களிலேயே பொறுப் பேற்று பணியாற்றி வருகிருர்.

சகோதரர்கள் :

திரு. ஆர். கே. எஸ். அவர்கள் உடன்பிறப்புத் தம்பியர் மூவர். திருவாளர்கள் ஆர். கே. வெங்கடாசலம், இராமகிருஷ்ணன். ஆர். கே. கந்தசாமி ஆகியோர்.

திரு. ஆர். கே. வெங்கடாசலம் அவர்கள் கோவை நகராட்சி மன்ற துணைத் தலைவராய்த் திகழ்ந்தவர். கிருபாகர நிதி பேங்க் தலைவர். சென்னை இந்தியன் பேங்க் நிர்வாக உறுப்பினர். வணிகத் தொழில் துறை அனுபவம் மிக்கவர்.

திரு. ஆர். கே. இராமகிருஷ்ணன் இளமையிலேயே கலை ஆர்வம் மிக்கவர். சினிமா படமெடுப்புத் தொழிலில் ஈடுபட்டார். வட நாட்டுப் பெரும் செல்வந்தர்களும் திகைக்கும்படி "சென்ட்ரல் ஸ்டுடியோஸ்" என்ற சினிமாப் படமெடுக்கும் நிறுவனத்தை அமைத்துத் திறம்பட நடத்தியவர்.

திரு. ஆர். கே. கந்தசாமி (B. A. Bsc. Tech. A. M. Ct.) அவர்கள் பி. ஏ. பட்டம் பெற்றவர். மேனாடுகள் பல சென்று தொழில் நிர்வாகத்துறையில் சிறந்த பயிற்சிபெற்றவர். வசந்தா மில் நிர்வாக அதிபர் இவரே யாகும். சிறந்த கனவான் (Perfect Gentleman) என்பதற்குத் தகுந்த உதாரணமாக இவரைத் தயக்கமின்றிக் கூறலாம். நற்பண்பினர். பிறர் நலிவு கண்டு மனமுருகி இயன்ற உதவி செய்யும் தாராள மனப்பான்மையும், நல்லெண்ணமும் கொண்டவர். யாவரிடமும் அன்புடன், ஆதரவுடன், சமத்துவத்துடன், பரிவுடன், உரையாடும் உத்தம சீலர். சித்தம் சிரிக்கப் பேசுவார், கேட்போர் சித்தம் இனிக்கும் முறையில் - நட்புத்துறையில் - "முக நட்பினர்" அல்ல — "அக நட்பினர்."



திரு. R. K. கந்தசாமி B. A.
அவர்கள்

திரு. ஆர். கே. எஸ். அவர்களின் நினைவு மலராக - சரித்திர ஏடாக - இம்மடல் வெளிவரப் பெரிதும் ஊக்குவித்தவரும், உதவியவரும், தூண்டுகோலாயிருந்தவரும், தன் அண்ணரது புகழ் பரவி நிலைத்திருக்க எண்ணியவரும் திரு, ஆர். கே. கந்தசாமி அவர்களே என்பது போற்றற்குரிய அரும் பெரும் செயலாகும்.

இவரது குலந்தழைக்கவந்த குலசேகரியார், "பிரேம குமாரி" (அன்புச் செல்வி) தந்தையாரின் விசேஷச் சிறப்பு களின் பிரதிபிம்பம். விளையும் பயிரின் சிறப்பு முளையிலே திகழ்கிறது .இக்கலைவள செம்மலின் தொழில் துறை வார்சாக நற்புத்திர ரத்தினம் விரைவில் உதிக்கவேண்டும் என்பதே அனைவரின் பிரார்த்தனை.



அன்னை ஸ்ரீரங்கம்மாள் உயர்நிலைக் கலாசாலை :

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"—

இந்த மெய்மையைக் குறளறிவுச் செல்வரான உயர்திரு, ஆர். கே. சண்முகம் அவர்கள் தமது பொதுப்பணிக் குறிக் கோளாகக் கொண்டார். வெறும் விளம்பரப் பிரியர்களைப் போல், தற்காலப் பலனளிக்கும் பொதுப்பணிகளில் இவர் கருத்துச் செலுத்தவில்லை. ஆயினும், மக்களுக்கு அறிவுக் கண் தந்து, அவ்வறிவின் துணைகொண்டு ஒவ்வொருவரும்

தத்தம் நல் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ளும் கலவித் துறையில் இவர் முழு கவனம் செலுத்தினர். பல கலாசாலை களுக்கு நூல்கள் பல உதவினர்.

கோவை யூனியன் ஹைஸ்கூல் என்ற உயர் நிலைப் பள்ளியின் காவலர் இவரேயாகும். இத்துடன் இவர் அமைதி கொள்ளவில்லை. அன்னையையே முன்னறி தெய்வமாகக்கொண்டவர் இவர். கனிந்த அன்பு தந்து வளர்த்து பொது வாழ்விற்குப் பயன்படுத்திய, ஈன்ற திருவாட்டியார் ஸ்ரீரங்கம்மாள் பெயரும் மறையாதிருக்கவும் வழி செய்துள்ளார். அன்னையார் பெயரால் தமது சொந்தக் குடும்பச் சொத்திலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் செலவிட்டு இந்தப் பள்ளியை நிறுவியுள்ளார். மற்றும் இப்பள்ளியின் நிர்வாகச் செலவுக் கெனத்தொழில் நிறுவன வருவாயில் தமக்குரிய பங்கிலிருந்து ஆண்டுதோறும் ரூபாய் 25,000 கொடுக்கவும் ஏற்பாடு செய்துள்ளார்.

மற்றும் திறம்பட நிர்வாகம் நடத்தப்பெற வேண்டுமெனக் கருத்தில் கொண்டு, பத்து ஆண்டுகள் ஆசிரியத்தொழில் அநுபவம் பெற்ற திரு எஸ். துரைசாமி நாயுடு எம். ஏ; எல். டி. அவர்களை இக் கலாசாலைத் தலைவராக அமர்த்தினர். இவர் தலைமை ஆசிரியராக ஐந்தாண்டுமுன் அநுபவம் பெற்றவர். ஆங்கில தமிழ் புலவராக உள்ளவரே நிர்வாகாதிபராக வேண்டுமென்பது திரு ஆர். கே. எஸ். அவர்களின் விருப்பம். அவ்விருப்பப்படியே இந்த நியமனமும் செய்தார்.

அன்னையின் சிறப்பொளியான இவ் உயர்நிலைக் கலாசாலை கட்டி முடித்து, விழா நடத்தும் தருவாயில் திரு ஆர். கே. எஸ். அவர்கள் திடீரென மறைஉற்றது வருந்தத் தக்க பெரும் நஷ்டமாகும்.

இக் கலாசாலையிலேயே பெரிய நூல் நிலயமும் அமைக்க வேண்டு மென்பதும் மறைந்த மேதையின் விருப்பம். அவரது மாளிகையில் உலகில் சிறந்த, ஒப்புயர்வற்ற பல கலைப் புத்தகங்களும், உலக மேதைகளும், விற்பன்னர்களும் எழுதிய அறிவுப் புதையல்களான புத்தகங்கள் சீர்பெற அடுக்கிச் செம்மையுறப் பாதுகாக்கப்பட்டு வருவதை யாரும் காணலாம். இந்தியாவிலேயே இத்தகைய பெரிய சொந்த புத்தக சாலையைப் பெற்றிருப்பவர்கள் இரண்டே நபர்கள்தாம். ஒருவர் தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப் பெருந் தலைவர் டாக்டர் அம்பேத்கார், மற்றவர் தென்னாட்டு மேதை அறிவுக் களஞ்சியம் ஆர். கே. எஸ். அவர்கள். அவரது பூத உடல் மறைந்தது - ஆயின் புகழுடல் - பொதுப் பணியுடல் என்றென்றும் சிரஞ்சீவியாக நீடித்துத்தானிருக்கும் - மங்கா நன்மாணிக்கமென, இதில் சிறிதும் ஐயமில்லை.



திரு, B. V. நாராயணசாமி நாயுடு
அவர்கள்

திரு, S. துரைசாமி நாயுடு
அவர்கள்

உலகப் பெரியாருள் ஒருவரான திரு. ஆர். கே. எஸ். அவர்கள் இறுதிக் கட்டத்திலே கூறிய பொய்யாப் பொன்மொழி;

"ஒருவன் உழைக்க - அறிவு வளம்பெற உரிய சக்தியை இழந்து விடுவானாயின் அவன் இருப்பதிலும், இறப்பதே மேல்" - என்பதாகும். அறிஞர் சண்முகத்தின் எதிர்பாரா அகால மரணம் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். அவரது ஸ்தானம் நிரப்பக்கூடியதன்று. அவரது மறைவால் அறிவுலகம் ஒரு கலங்கரை விளக்கத்தை இழந்தது. அல்லலுறும் மக்கள் ஓர் ரட்சகனை இழந்தனர். இருட்டில் உழன்று, ஏங்கித் தவிக்கும் பல்லாயிரவர் ஒரு வழிகாட்டியை இழந்தனர். வாதிக்கும் திறனும் வித்தகமும் நிறைந்த ஒரு மெக்காலேயை மக்கள் இழந்தனர். ரசனை உள்ளமும், கலை அறிவும் செறிந்த மேதையை மக்கள் இழந்தனர். தென்னாட்டினர் மீண்டும் ஒரு சண்முகத்தைக் காண பல தலைமுறைகளாகலாம்.

வாழ்க சண்முகத்தின் உயர் நாமம் !
தழைக்க அவர் தம் உயரிய சேவைகள் ! !

கோவையில் பிரபல திருமணம்!



மணமகள் : **R. சரஸ்வதி**

மணமகன் : **R. ரகுநாதன்**

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக் கூறும் மக்கள் உலகு"—என்று திருவள்ளுவ நாயனரின் செம்மொழிக்குத்தகுந்த உதாரணமாக விளங்குபவர், கோவை, சுவர்ண மாளிகை சீமான் வைசிய பூஷணம், திரு. P. A. ராஜு செட்டியார் அவர்கள், எல்லார்பாலும், அன்புடனும், நேசபாவத்துடனும், புன்முறுவல் முகத்துடனும், தம்முடன் பேச வந்தவர்களுக்கு மதிப்புத்தரும் பாணியிலும் பேசும் உயர் குணம் மிக்கவர். உண்மை பரிசுத்த கருணையுள்ளத்தின் வெளித் தோற்றம்.

செழுங் கிளை தாங்கும் அழகுச் செல்வர், பிறர் குறை தீர்க்கும் பெருந்தகையாளர் "பெற்ருேம் யாம் பெருஞ் செல்வம்" என்ற தற்பெருமை யற்றவர். மாடி வீட்டுச் சீமான்தான், ஆனுல் தேடிவந்தால் பாமர ஏழைகளையும் பரிவுடன் விசாரித்துதவும் பண்பாளர். கோவை மாவட்டத்தில் எந்த நகரிலாயினும், நமக்கு அறிமுகமான, வைசிய செட்டியார்,



மணவரையில் மணமக்கள்.

யாரையாவது சந்தித்துப் பேச நேரிட்டால், அவர்" "மனபழனி ராஜு" வைப்பற்றி, ஏதாவது சிறு குறிப்பு பெருமிதத்துடன் கூறுமல்—எந்த விஷயத்திற்கும் "மனபழனி ராஜு"வை உதாரணமாக எடுத்துச் சொல்லாமல் தமது பேச்சை முடிக்கமாட்டார்கள்.

மற்றும் வியாபாரத் துறையிலும், நாணயத்திலும். பெருந்தன்மையிலும், இவர் ஈடற்று விளங்குகிருர், இத்தகைய செல்வமும் செல்வாக்கும் கொண்ட கருணை வள்ள



மணமக்கள் ஊர்வலக் காட்சி

லாகிய திரு. P. A. ராஜு செட்டியாரவர்கள் குடும்பத்திலே, திருமணம் என்ருல் ஆடம்பரத்திற்கும், உபசாரத்திற்கும் உவமை கூறக் கூடியதுண்டா ?

இராமாயணம் பாலகாண்டத்திலே வர்ணித்திருக்கிருரே, கவிச்சக்ரவர்த்தி இராமர் கல்யாணத்தைப் பற்றி – இந்த வர்ணனையை, நிதர்சனமாகக் காணக் கிடைத்தது. கடந்த ஆவணித் திங்கள், 11–ம் தேதி வியாழக் கிழமை (27–7–53) கோவைமா நகரிலே - வைசியாள் வீதியிலே, திரு ராஜு செட்டியாரின் திருமாளிகையிலே.

நன்னுளான அன்று காலை 9 மணி சுமாருக்கு நல்லோரையிலே, திரு. ராஜு செட்டியாரவர்களின் தம்பியார் திரு P. A. ராமசாமி செட்டியாரவர்களின் திருக்குமாரர் செல்வன் R. ரகுநாதன் அவர்கட்கும், மதுரை பிரபல வியாபாரம் P. S. A. இராமசாமி செட்டியாரவர்கள் திருக் குமாரத்தி செல்வியார் சரஸ்வதிக்கும் திருமணம் வெகு சிறப்புடன் நடந்தது.

திரு. P. A. ராஜு செட்டியார்

கோவைத் தந்தை

அத்திருமண மண்டப அலங்காரச் சிறப்புகளையும் வந்திருந்தோருக்கு நடத்தப்பட்ட உபசார மகிமைகளையும் வர்ணிக்க மற்றொரு கம்பனால்தானியலும். வைசியாள் வீதி வழக்கமாகத் திருவிழாவீதி. அத்தகைய விழாக்களுக்கு வரும் கூட்டமும் இத்திருமணத்திற்கு வந்தவர் கூட்டத்திற்கு இணையாகாது. கண்கொண்டு பார்த்தவிடந்தோறும் அலங்காரக் காட்சிகள், மகிழ்ச்சியோ உருவான மக்கள் கூட்டம். சிறப்பை வர்ணித்துக் குதூகலிப்போர் பேச்சொலி அன்று மாத்திரமன்று; திருமண வைபவம் நடந்து பல நாட்களுக்குப் பின்னரும், இந்தத் திருமண வைபவச் சிறப்புக்கள் பற்றியே எங்கும் பேச்சாக இருந்தது.

"கல்யாணம் என்றால் நம்ம ராஜு செட்டியார் வீட்டுக் கல்யாணம் போலல்லவா இருக்கவேண்டும்" என்று பெருமையுடன் பேசுவது இப்போது புது மொழியாகியுள்ளது. மற்ற சிறப்புகளைவிட திருவாளர். செட்டியார் அவர்கள் நகைமுக அன்புபசாரம் பல்லாயிரம் பங்கு அதிகப் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

அன்று மாலையிலே, மற்றொரு விருந்து அவருடைய ராஜா தியேட்டரிலே நடந்தப்பட்டது, இது கலை விருந்து குமாரி திருமதி கமலா, கோஷ்டியின் நாட்டிய நளின விருந்து, இந்த நாட்டிய விருந்திற்கு, மாநிலமெங்குமுள்ள பெரு நில கிழவர்கள், ஆங்கிலேயர்கள், ஆலை அதிபர்கள். அரசியல் தலைவர்கள் வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், உறவினர்கள், உற்றூர். பிரமுகர்கள், பொது மக்கள் ஆகிய பலரும் வந்திருந்து திருமணத்தை அணி செய்வித்தனர்.



R கிருஷ்ணன்

R. விஸ்வநாதம்

யாவரையும் முகமலர்ந்து இன்சொல் கூறி வரவேற்று உபசரித்து வழியனுப்பிய தனிப் பெருமை R. விஸ்வநாதம், திரு. R. கிருஷ்ணன் அவர்களையும் சாரும்.

திருமணத்தை வாழ்த்தி ஐநூற்றுக்கு மேற்பட்ட தந்திகளும் கடிதங்களும் வாசிக்கப்பட்டன. பல விலையுயர்ந்த பொன் வெள்ளியால் செய்யப்பட்ட பொருள்கள் இருநூறு கணக்கில் பரிசுகளும், வழங்கப் பெற்றன. பல அன்பர்கள் சர்பாக நூற்றுக்கணக்கான வாழ்த்து இதழ்கள் பாராட்டு மடல்கள், வாசித்துக் கொடுக்கப்பட்டன. அடுத்த நாள் வெள்ளிக்கிழமை இரவு 9-30 மணிக்கு புது மணமக்கள், ஊர்வல வைபவம் நடந்தது. மணமக்கள் அமர்ந்திருந்த 'அன்னப்பறவை அலங்கார மோட்டாரைக் கண்டவர்கள், சொர்ணமாளிகையே நகர்ந்து வருகிறதோ? என்று வியப்புற்றனர். அவ்வாறு தனிச் சிறப்புடன் இணையில்லா முறையிருந்தது. அந்த ஊர்வலத்தில் இசையரசு குளிக்கரை எஸ். பிச்சையப்பா, கோஷ்டியாரின் நாதசுர நல்லிசையும் நடைபெற்றது. வாண வேடிக்கைகள். கண்கொள்ளாக் காட்சியாக மிளிர்ந்தன.

வாழ்த்துச் செய்தி அனுப்பிய பிரமுகர்கள்.

திரு. P. A ராஜூ செட்டியார் வியாபாரத் துறையில் மாத்திரமின்றி அரசியல் வட்டாரத்திலும் நல்ல செல்வாக்கு பெற்றவர். காங்கிரசுப் பிரமுகர்கள் இவருக்கு நல்ல அறிமுக

மானவர் இத்திருமணத்தை வாழ்த்தித் திந்திகளும், கடிதங்களும், ஜனதிபதிகளும், பந்திரிகளும் சட்ட சபை அங்கத்தினர்களும், சட்ட சபைத் தலைவர்களும், மற்றுமுள்ள பிரமுகர்களும் அனுப்பிவைத்தனர்,

அவர்களுள் முக்கியமானவர்கள்.

இந்தியயூனியன் பிரசிடெண்ட், கனம் டாக்டர் ராஜேந்திர பிரசாத், துணைத் தலைவர். கனம் டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் இந்திய சர்க்கார் நிதிமந்திரி, சிந்தாமணி தேஷ்முக் சென்னை நிதியமைச்சர், கனம். C. சுப்ரமண்யம், சென்னை விவசாய மந்திரி, கனம் V. C. பழனிச்சாமி கவுண்டர், அற நிலைய பாதுகாப்பு மந்திரி, K. வெங்கடசாமி நாயுடு, கைத் தொழில் மந்திரி டாக்டர் கிருஷ்ண ராவ். சென்னை ஹைகோர்ட் நீதிபதி கனம் ராஜமன்னர், நீதிபதி ராமசாமி கவுண்டர், நீதிபதி ராஜகோபாலன், நீதிபதி கனம் பி. சந்திர ரெட்டி சென்னை சட்ட சபைத் தலைவர், கனம் ஜே. சிவசண்முகம் பிள்ளை ஆகியோர். மற்றும் வர்த்தக சங்கங்களும், பாங்கிகளும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்களும்: ஆரிய வைசிய சமாஜங்களும், ஏராளமான வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்திருந்தனர்.

புது வாழ்வு புகும் மணமக்கள் எல்லா நலனும் பெற்று இனிதே வாழப் பெரிதும் விழைகிறோம்.

—**ஆசிரியர்**

தயாராகிறது ! அழகிய பதிப்பு !!

அறிஞர் டாக்டர்.

R. K. **சண்முகம் செட்டியார் அவர்கள்**

வாழ்க்கை சரிதம்

ஆசிரியர் : A. S. **மாணிக்கம்** அவர்களால் எழுதப் பெற்றது

தனிப்பிரதி விலை ரூ. 1—0—0

விபரங்களுக்கு :

பாலு பதிப்பகம், சூலூர், P. O. **கோவை ஜில்லா.**

முக்கிய குறிப்பு :

மறைந்த மாவீரர் திரு. ஆர். கே. எஸ். அவர்களின் வாழ்க்கைச் சரிதையில் ஒரு சில பகுதிகளே இதில் இடம் பெற்றுள்ளன. "கோவை முரசு" பத்திரிகையின் ஆண்டு மலராக இது வெளிவருவதால் இதற்கு மேல் இது பெரி தாக்கும் வாய்ப்புப் பெறவில்லை. இதனைக் கண்ணுற்ற பலர் - பொது மக்கள் - பிரமுகர்கள் - முதலானோர் இவரது வாழ்க்கைச் சரிதத்தைத் மற்றும்பல ஆதாரங்களோடும், புள்ளி விவரங்களோடும், அவரது பள்ளி வாழ்க்கையி லிருந்து - அவர் படிப்பில் காட்டிய ஆர்வம். பொதுஜன சேவையில் காட்டிய உற்சாகம், பதவிகளை அவர் நாடாமலே, பதவிகள் அவரை நாடி வந்தடைந்தது, மேனாட்டு சுற்றுப் பிரயாணங்களை அவர் பல தடவைகளில் மேற்கொண் டது, அதன் காரணம், ஒவ்வொரு சமயமும் அவர் நாட்டுக் கும் மக்களுக்கும், சர்க்காருக்கும், ஆற்றிய சேவைகள், இவ ரது வாழ்க்கையில், பல ருசிகர நிகழ்ச்சிகள் முதலி யவற்றைச் சீர்படத் தொகுத்து அவரது வாழ்க்கை, முதி யோர்க்கு ஒரு சாசனமாகவும். சிறார்களுக்கு ஒரு முன்மாதிரி யாகவும் காட்சியளித்து பயன் பெறச் செய்யுமளவுக்கு கருத்து நிறைந்ததாய், பொருள் மலிந்ததாய், விளங்கும் வண்ணம் ஒருதனி வெளியீடாகவே, பதிப்பித்தது வெளியிட எண்ணி யுள்ளோம். ஆகையால் அத்தகைய வெளியீட்டை தமிழ் மக்கள் வெகு விரைவில் எதிர்பார்க்கலாம் என உறுதி கூறுகிறோம்.

ஆசிரியர்.

சென்னையில் ஆசிரியர்

சென்னையிலுள்ள வணிக வைசியப் பெருங்குடி மக்கள் பிரமுகர்கள் பலரைச் சந்தித்து இம்மலருக்கு ஆக்கந் தேட முயற்சித்ததில் பலர் மனமார உதவி செய்தார்கள். அதைப் பற்றிய முழு விவரமும், ஏனைய நண்பர்களான உயர் திருவாளர்கள் S. K. பீமராவ், R. S. வேலாயுதம் பிள்ளை, ஆகியோர், இவ் வெளியீட்டைத் துரிதமாக வெளிக் கொண்டு வர உதவியது பற்றியும் முழுவிவரங்கள் "கோவைமுரசு" அடுத்த இதழில் வெளியிட இருக்கிறோம் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

பருத்தி நூலாக மாற-

பருத்தி நூலாக மாறுவதற்கு எவ்வளவோ பாடுபட வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு முறையும் நாங்கள் அம்மகத்தான காரியத்தைச் சாதிக்கிறோம்.

சிறந்த முறையில்

உயர்ந்த ரகம், உறுதி, நியாய விலை, ஆகிய வற்றிற்குப் பெயர் பெற்றவை. **ராஜலக்ஷ்மி மில்ஸ்** நூல் ரகங்கள் கால் நூற்றாண்டுக்கு அதிகமாகவே நெசவாளர்களிடையே மிகவும் பிரசித்தமானவை.

கதிர்கள் :— 27,366 தற்சமயம் இருப்பவை.

,, 8,000 விஸ்தரிப்பில் ,,

பருத்தி நூல்கள் :— 20s. 40s. 60s. 2/40s.

ஸ்டேபில் பைபர் நூல்கள் :— 20s. 2/20s.

ராஜலக்ஷ்மி மில்ஸ் லிமிடெட்,

சிங்காநல்லூர் — கோயமுத்தூர்.

மானேஜிங் ஏஜண்டுகள் :

திரு. B. ரங்கசாமி நாயுடு அண் சன்ஸ்.

அந்தோ மறைந்தார்! நமதருமைத் தலைவர் !!

திரு. நாச்சிமுத்துக் கவுண்டர்

அவர்கள்

ஏ. பி. டி. ஸ்தாபகர் - நற்பண்பினர்.

ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட்டின் ஸ்தாபகரும் அதிபருமான பொள்ளாச்சி திரு. பி. நாச்சிமுத்துக் கவுண்டரவர்கள் சில நாள் நோய்வாய்ப்பட்டிருந்து தனது 51-வது வயதில் அகால மரணம் அடைந்த செய்தி கேட்டு மிகமிக வருந்துகிறோம். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவரேயாயினும், தன்னுடைய சொந்த முயற்சியாலும், ஊக்கத்தாலும், நற்பண்பினுலும் படிப்படியாக உயர்ந்து முன்னேறியவர். சகலரிடத்தும் வெகு சுமுகமாகப்பழகுபவர். யாருக்கும் எச் சமயத்திலும் எவ்வித உதவியும் தரமறிந்து செய்யத் தவறியதே கிடையாது. அவர் பொள்ளாச்சி நகராண்மைக் கழகத் தலைவராயிருந்து பொது மக்களுக்காற்றிய தொண்டை அந்நகர மக்கள் என்றும் மறக்க முடியாது. நமது பத்திரிகை வேலை முடிந்து வெளியாகும் தருவாயில் இச் செய்தி நமக் கெட்டியபடியால் அவரைப்பற்றியும் அவரது தொண்டைப் பற்றியும் அடுத்த சஞ்சிகையில் விரிவாக எழுத உள்ளோம். அவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், குமாரர் திரு. என். மகாலிங்கம் எம். எல். ஏ. அவர்கட்கும் நமது அநுதாபம் உரித்தாகுக.

—ஆசிரியர்.

சிலவு குறைக்க டயர்...



புதுப்பிக்கவும்

பத்து வருட நுண்ணிய அனுபவ முறையில். பஸ், கார் பழைய டயர்களை செப்பனிட்டு புதுப்பிக்கிறோம்.

முன்னணி இயந்திர முறையில், நாட்டின் ரஸ்தாக்களுக்கு உகந்த "ட்ரெட்" அமைத்து நீடித்த உழைப்பைக்கான பணியாற்றுகிறோம்.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

புதுக்கோட்டை

(ஓர் டி. வி. எஸ். ஸ்தாபனம்)

பொதுஜன வசதி

அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்கள்

பொதுஜன வசதி என்பது பல வகைகளில் பொதுவாக ஜனங்களுக்கு வேண்டிய வசதிகளைக் குறிப்பதாகும். இந்த வசதிகள் தேசங்களுக்குத் தக்கவாறும், அங்கங்கு கிடைக்கின்ற சாதனங்களுக்குத் தக்கவாறும், கவர்ன்மெண்டினாலும் அல்லது தனிப்பட்டவர்களாலும், தனிப்பட்டவர்கள் சேர்ந்த சங்கங்களாலும் அல்லது இரண்டுக்கும் மத்தியதரமாக உள்ள போர்டுகளினாலும், அல்லது இரண்டும் சம்பந்தம் இல்லாத போர்டுகளினாலும், லோக்கல் போர்டுகள் அல்லது முனிசிபாலிடிகளாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விஷயங்களில் இப்பொழுது நம் நாட்டில் அனுபவத்தில் நடந்து வருபவைகளையும், இங்கிலாந்து போன்ற மற்ற நாடுகளில் நடக்கிற மாதிரிகளையும் பற்றி ஆராய்வோமானால் இப்பொழுது நம் நாட்டிற்கு எம்மாதிரி இருந்தால் நலம் என்பதையும் ஒருவாறு யூகிக்கலாம்.



அறிஞர், ஜி. டி. நாயுடு.

நம் நாட்டில் பொதுஜன சவுகரியத்துக்காக வேண்டியுள்ள தபால் தந்தி இலாகா, அதிகக் காலமாக கவர்ன்மெண்டினாலேயே நிர்வகிக்கப்பட்டு வேண்டிய சௌகரியங்கள் கொடுப்பதுடன், ஒழுங்காக லாபத்தோடு நடந்து வந்திருக்கின்றன. ஆனால் இதே மாதிரி ஜனங்களுக்குத் தேவையாய்

உள்ள பிரயாண வசதிக்காக ஏற்பட்ட ரயில்வேக்களும், பஸ் சர்வீஸ்களும், கப்பல் போக்குவரத்துக்களும் தனிப்பட்டவர்கள் சேர்ந்த கம்பெனிகளாலும், தனிப்பட்டவர்களாலுமே நடந்து வந்திருக்கின்றது.

கொஞ்ச காலமாக அதாவது சென்ற சில வருடங்களாக ரயில்வேக்களும், டெலிபோன்களும், டிராம்வேக்களும், சில இடங்களில் பஸ் சர்வீஸ்களும் கவர்ன்மெண்டாரால் எடுத்து நடத்தப்பட்டு வருகின்றன. எலக்ட்ரிசிட்டியும், நிலக்கரி சுரங்கமும் இப்பொழுதும் சில விடங்களில் தனிப்பட்ட கம்பெனிகளாலும், மற்ற இடங்களில் கவர்ன்மெண்டாலும் நடத்தப்பட்டு வருகின்றன. அனேகமாக எல்லா நகரங்களிலும், தண்ணீர் வசதி, ஆஸ்பத்திரிகள், கல்வி நிலையங்கள் முதலியவை லோக்கல் போர்டுகளாலும், முனிசிபாலிடிகளாலும், பஞ்சாயத்துக்களாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இன்னும் அநேக தொழில்களையும் கவர்ன்மெண்டாரே ஏற்று நடத்தவேண்டும் என்கிற கோட்பாட்டில் எல்லாக் கட்சிகளும் கவனம் செலுத்தி வருகின்றன. இப்பொழுது இருக்கிற மாதிரி எலக்ட்ரிசிட்டி, ரயில்வே, டெலிபோன் முதலிய சில இனங்கள் தகுந்த லாபத்தில் நடந்து வருகின்றதாயினும், மற்றும் சில இனங்களில் எதிர்பார்த்த லாபம் இல்லாமலும் நடந்து வருகின்றன. ஆனால், தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழில்களில் அதிக லாபம் வந்துகொண்டிருந்தாலும் சிறிது காலமாக இந்த லாபங்கள் குறையும் முகத்தோடுதான் நடந்து வருகின்றன. இவற்றின் காரணங்களை இங்கு விவரிக்க வேண்டியதில்லை. கொஞ்ச காலத்துக்கு முன் வரை நம்மை ஆண்டு கொண்டிருந்த பிரிட்டனில் இம்மாதிரிப் பொதுஜன வசதிகள் எவ்வாறு நடந்து வருகின்றன என்பதைக் கவனிப்போம்.

இங்கிலாந்தில் முதல் துவக்கத்திலிருந்தே பொது ஜனங்களுக்கு வேண்டிய வசதிகளாகிய ஒவ்வொரு தொழிலும் தனிப்பட்ட கம்பெனிகளினலேயே ஆரம்பிக்கப்பட்டு நாளாவட்டத்தில் சிலவற்றைக் கவர்ன்மெண்டார் எடுத்து நடத்தி வருகின்றார்கள். உதாரணமாக அது தனிப்பட்ட கம்பெனிகளுக்குச் சொந்தமாக இருந்த ரயில்வேக்கள் ஒரு காலத்தில் நான்கு கம்பெனிகளாக ஐக்கியப்பட்டு, அதன் பின்பு கவர்ன்மெண்டால் எடுத்து நடத்தப்பட்டு வருகிறது. பல கம்பெனிகளால் ஆரம்பிக்கப்பட்ட 'Gas' காஸ், எலெக்ட்ரிசிடி முதலியவை இப்போது கவர்ன்மெண்டாரால் எடுத்து நடத்தப்பட்டு

வருகின்றன. தபால் தந்தியும்கூட ஆதியில் பல கம்பெனி களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்திய பின்புதான் கவர்ன்மெண் டார் எடுத்து நடத்தி வருகிறார்கள். இப்பொழுதும் பஸ் சர்வீஸ்கள் - தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வந்தாலும் கூட அநேக இடங்களில் கவர்ன்மெண்டார் எடுத்து நடத்தி வருகிறார்கள். கப்பல் துறைமுகங்களும், நிலக்கரி இரும்பு முதலிய சுரங்கங்களும், ஏரோபிளேன் சர்வீஸ்களும் கவர்ன் மெண்டாரே எடுத்து நடத்தி வருகிறார்கள். ஆஸ்பத்திரி முதலியவைகளும் கவர்ன்மெண்டாரே நடத்தி வருகிறார்கள். இங்கு கவர்ன்மெண்டார் நடத்துகிறார்கள் என்றால், லோக்கல் போர்டுகளும் பப்ளிக் போர்டுகளும்கூட இதில் அடங்கியிருக் கின்றன. உதாரணமாகத் தபால் தந்தி இனங்களைக் கவர்ன் மெண்டார் தனியாகவே நடத்துகிறார்கள். பஸ் டிரான்ஸ் போர்ட்டுகளைக் கவர்ன்மெண்ட்டும், பொது ஜனங்கள் சம்பந்தப் பட்ட பப்ளிக் போர்டுகளும், சில இடங்களில் முனிசிபல் கார்ப்பொரேஷன்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. 'Gas Electricity' முதலிய சில இனங்கள் இதே மாதிரிதான். ஆனால் ஆஸ்பத்திரிகளும், கல்விச்சாலைகளும், கவர்ன்மெண் டாலும் லோக்கல் போர்டுகளாலும் நடத்தப்பட்டு வருபவை தவிர மற்றவை தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வருகின் றன. இவற்றை முழுவதும் எந்தெந்த வழிகளில் எவ்வெவ் விதம் பொது ஜனங்களுக்குக் குறைந்த செலவில் தகுந்த வசதி களைக் கொடுத்து நடத்தி வருகிறார்கள் என்பதை இங்கு அத னதன் சரித்திரங்களோடும் புள்ளி விவரங்களோடும் இந்தக் குறைந்த நேரத்தில் சொல்ல முடியாது. மொத்தத்தில் அங்குள்ள பொது ஜனங்கள் எல்லாரும் படித்தவர்களாகவும், அவரவர்களுடையவும் மற்றவர்களுடையவும் பொறுப்பை உணர்ந்தவர்களாகவும் இருப்பதால், கவர்ன்மெண்டு நிர்வாகத் திலும், பொறுப்பு அறிந்தவர்களாகவும் அனுபோகமுள்ளவர் களாகவும், அமர்ந்திருப்பதுடன் மிகவும் அதிகக் காலத்து அனு போகத்தின் பேரில் பொதுஜன வசதிகளுக்கு வேண்டிய வற்றைப் பொறுக்கித் தேசியமயமாக்கப்பட்டிருப்பதால், எல் லாம் ஒழுங்காக நடந்து வருகின்றன என்று சொன்னால் மிகை யாகாது.

துவக்கத்தில் இன்னும் சில குறைகள் இருந்தாலும் கூட அங்கிருப்பவர்கள் எல்லாரும் தத்தம் பொறுப்பை உணர்ந் தவர் என்கிற ஒரே காரணத்தால் சிறிது சிறிதாகத் தேசிய மயமாக்கப்பட்டவைகளும், இனிமேல் செய்யப்படுபவைகளும் பொதுஜன வசதிகளுக்கு ஒருக்காலும் குறைவு வராமல் நடத்தி வருவார்கள் என்பதில் ஒரு சிறிதும் சந்தேகம் இல்லை.

அந்தத் தேசத்தில் எல்லாவற்றையும் ஒரே நாளில் தேசிய மயமாக்கப்படவில்லை. ஒவ்வொன்றையும் நன்ருக அறிந்து தெரிந்த பின்புதான் தகுந்தவற்றை எடுத்திருக்கின்ருர்கள். ஆனல், எது எது பொது சவுகரியங்களுக்கு வேண்டியதோ அவற்றை எடுக்காமலும் விடவில்லை. இன்னும் அக்கரையோடு, அதிக ஆராய்ச்சியும் அனுபவமும், எது எதற்கு வேண்டுமோ அவற்றிற்கெல்லாம், தனிப்பட்டவர்களுக்கு வேண்டிய சலுகைகளைக் கொடுத்து, மிக ஒற்றுமையோடு ஒவ்வொருவருடைய அறிவையும் பின்னல் பொதுநலங்களுக்கு உதவக்கூடிய வழிகளில் உபயோகித்து விருத்தி செய்து வருகிருர்கள்.

இனி, நம் தேசத்தில் பொதுஜன வசதிகள் எப்படி நடந்து வருகிறது என்பதை சற்று கவனிப்போம். இங்கும் முன் சொன்னபடி கவர்ன்மெண்டால் நடத்தப்படும், போஸ்ட், தந்தி, டெலிபோன், ரயில்வே முதலியவை ஒழுங்காக லாபத்தோடு நடந்து வருகின்றன. இவற்றிலும் இன்னும் அதிக லாபம் அடையக்கூடிய வழிகளும் இருக்கின்றன. லாபத்தை எதிர்பாராது, பொதுஜன வசதிக்காகவே கவர்ன் மெண்டார் நடத்திவரும் ஆஸ்பத்திரிகளும் கல்விச்சாலைகளும் இருக்கின்றன. இவை தவிர முனிசிபாலிடிகளாலும் கார்ப்பரேஷன்களாலும் ஜில்லா போர்டுகளாலும் பஞ்சாயத் போர்டுகளாலும் நடத்தப்பட்டு வருகின்ற கல்விச்சாலை, ஆஸ்பத்திரிகள் முதலியனவும் இருக்கின்றன. மற்றும் சுகாதார இலாக்காக்களும், குடிதண்ணீர் வசதிகளும் இவ்வாறே நடைபெற்று வருகின்றன. இவையன்றிக் கவர்ன்மெண்டாராலும் லோக்கல் போர்டுகளாலும் நடத்தப்பட்டு வருகின்ற - எலக்ட்ரிசிட்டி, ரோடுகள், நீர்ப்பாசனங்கள் முதலியனவும் இருக்கின்றன. இவை எல்லாம் பொதுஜனங்களுக்குச் சவுகரியங்கள் கொடுக்கக்கூடியதாய் இருந்தாலும் - தபால், ரயில், எலக்ட்ரிசிட்டி முதலியவை லாபத்தைக் கொடுப்பனவாகவும், மற்றவை லாபம் இன்றி செலவாகவே இருப்பதாகவும் இருக்கின்றன.

கொஞ்ச காலமாக, கவர்ன்மெண்டு மாத்திரமேயன்றி சில அரசியல் கட்சிகளும் சுரங்கங்கள், பஸ் டிரான்ஸ்போர்ட்டுகள், நூல் உற்பத்தி சாலைகள், சிமிண்டு செய்யும் பாக்டரிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், சினிமாக்கள், பாங்கிகள் முதலியவற்றை எல்லாம் தேசிய மயமாக்க வேண்டுமென்று கருதுகிருர்கள். லோக்கல் போர்டுகள்கூடப் பஸ் ஸர்வீஸ்களை முனிசிபல் மயமாக்கி நடத்தவேண்டும் என்று கோருகிருர்கள்.

நம் ராஜ்யத்திலும், நம் தேசத்தில் இதர சில பகுதிகளிலும், பஸ் டிரான்ஸ்போர்ட்டு தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றது. அதிர்ஷ்டவசமாக நம் ஸ்டேட்டில் நடக்கும் பஸ் சர்வீஸ் லாபம் உள்ளதாகவே இருக்கிறது. ஆனுலும், இன்னும் சில குறைபாடுகள் இருக்கின்றன. மற்ற இடங்களில் துரதிர்ஷ்டவசமாகத் தேசியமயமாக்கப்பட்ட பஸ் டிரான்ஸ்போர்ட்டு இவ்வளவு வெற்றிகரமாக நடக்கவில்லே. இவற்றைப் பார்க்கும்போது மற்ற பொது ஜனங்களுக்காக இருக்கும் மற்ற இனங்களேத் தேசியமயமாக்குவதற்குத் தயங்க வேண்டிய நிலேமை உண்டாயிருக்கின்றது. இந்த அனுபவத்தினுலேதான் லோக்கல் போர்டுகளினுடைய கோரிக்கைகளும் கூட கவர்ன்மெண்ட்டாரால் மறுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுதும் லோக்கல் போர்டுகளால் பராமரிக்கப்பட்டு வரும் குடிதண்ணீர் வசதிகளும், ஆஸ்பத்திரி, கல்விநிர்வாகம் முதலியவைகூடச் சரியாக நடந்து வருகிறதில்லே யென்று சில புகார்கள் வந்துகொண்டிருக்கும்போது மற்ற தொழில்களே உடனடியாக தேசியமயமாக்குவது என்பது முடியாததாகத்தான் இருக்கிறது. ஆனுல் ஆட்சியிலிருப்பவர்களும், லோக்கல் போர்டுகளில் அங்கம் வகித்திருப்பவர்களும் இந்தத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களும் - இந்தத் தேசம் நம்முடையது இந்த ராஜ்யம் நம்முடையது - இந்தத் தொழில்களும் வசதிகளும் நம்முடையவை - இவை நமக்கு வேண்டியவை என்ற முற்போக்கு மனப்பான்மையோடு கருதும் பக்ஷத்தில் தேசியமயமாக்குவதில் யாதொரு கஷ்டமும் இல்லே. அதனுல் குறைந்த செலவில் பொது ஜனங்களுக்கு வேண்டிய சவுகரியங்கள் செய்யவும், இவற்ருல் அடையும் லாபத்தைக்கொண்டு மற்றும் வேண்டிய வசதிகளேப் பெருக்கவும் மற்றத் தொழில்கள் முன்னேறுவதற்கு வேண்டிய வழிகளும் ஏற்படும். இந்தத் தொழில்கள் தவிர இன்னும் அனேக நூற்றுக்கணக்கான தொழில்கள் அபிவிருத்தி அடையாமலிருக்கின்றன. அவற்றின் அபிவிருத்திக்கும் வேண்டிய உதவிகளேத் தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்து எல்லாத் தொழில்களிலும் மற்ற நாடுகளேவிட நம் நாடு முன்னேறும்படியாகச் செய்யவும் இடம் இருக்கின்றது. இப்போது இந்த வசதிகளே எந்தச் சேதமுமின்றிகொடுப்பதற்கும், இன்னும் அதிக வசதிகளேப் பெருக்குவதற்கும் வேண்டிய மூலதனம் எது என்று கேட்டால், இதற்காகக் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ளும் நிரந்தரமானதும் பலமானதுமான வழிகளே ஒற்றுமையோடு ஆராய்ந்து அமுலுக்குக் கொண்டு வருவதும், இப்போது இருக்கும் தவறுகள் முழுவதையும் களேவதும்தான் முதல் மூலதனம். இந்த மூலதனத்துக்கு பஞ்சமாயிருக்கும்போது, கட்சிகளின் பேரால்

தொழில்களையும் நிலங்களையும் மற்றவைகளையும் ஒரே அடியாய் தேசீய மயமாக்க வேண்டும் என்று சொல்லுவதில் ஒரு அர்த்தமும் இல்லை என்றே சொல்லலாம்.

முதலில் பொதுஜன சவுகரியத்துக்காக எந்தத் தொழில்களைத் தேசீயமாக்க வேண்டும்? தேசீயமாக்குவதற்கு நாம் தக்க நிலையிலும் பருவத்திலும் இருக்கின்றோமா? முன் சொன்னபடி அந்த மூலதனம் இருக்கின்றதா? இவற்றை முதலில் சரி செய்வதைவிட்டுச் சிலர் சொல்கின்ற மாதிரி எல்லாவற்றையும் தேசீயமயமாக்கி விடலாம் என்று பாமர மக்களுக்கு உத்சாக மூட்டத்தக்கவாறு சொல்லுகிறபடி உடனே செய்தோமேயானாலும், அல்லது சில ஊழல்களின் காரணங்களால் இன்று நடந்துவரும் தொழில்களிலும் வியாபாரங்களிலும் சிலரால் கொள்ளையடிக்கப் படுகின்றதை அவ்விதம் நடக்கவிட்டு வைத்தாலும் நம் நாடு இன்றிருக்கும் நிலைமையை விடக் கீழ் நோக்கிப் போகுமேயன்றி முன்னேற்றமடையாது என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

ஆகையால் பல கொள்கைகளை உடைய, பலபேர்களுடைய பல கட்சிகள் என்பதை மறந்து இன்று நம் முன்னேற்றத்துக்கு வேண்டியவற்றைச் செய்யக் கடமைப்பட்டுள்ள ஒரே கட்சியாக எல்லாரும் சேர்ந்து நின்று ஒவ்வொருவரும் தம் பொறுப்போடு தமக்குத் தெரிந்திருக்கும் குறைகளை தாமே நீக்கப் பாடுபடுவாராயின் அதுவே நம்முன்னேற்றத்துக்கும், தேசீய தொழில் முன்னேற்றத்துக்கும், பொதுஜன வசதிகளின் வளர்ச்சிக்கும் அடிகோலியதாகும். இந்த அஸ்திவாரம் தான் நம்மை ஆண்டுகொண்டிருந்த பிரிட்டிஷ் ராஜ்யமும் மற்றத் தேசங்களும் கடைப்பிடித்து வருகின்றன.

இனியாவது பின்வாங்காமல் இந்தத் துறைகளில் நாமும் நமது தேசமும் முன்னேறுவோமாக.

(வானொலி இசைவு பெற்றது.)

கல்வி

கல்வி — ஏழைக்கு சொத்து பணக்காரனுக்கு — பெருமை அளிப்பது, இளைஞர்களுக்கு உதவி அளிப்பது, வயதானவர்களுக்கு ஆதரவளிப்பது.

—வால்டேர்

After sale, service guaranteed.



"டெக்ஸ்டூல்"
குரூடாயில்
என்ஜின்கள்

கோல்ட் ஸ்டார்டிங்

5. H. P.—700 R. P. M.

வெர்டிகல் - 2 ஸ்ட்ரோக்

&

6 H. P.—607 R. P. M.

ஹரிசான்டல்-4ஸ்ட்ரோக்

வெர்டிகல் — ஹாட் பல்ப் — 2 ஸ்ட்ரோக்

6 H. P. — 550 R. P. M. & 8 H. P. — 550 R. P. M.

விவரங்களுக்கு:

விற்பனை ஏஜெண்டுகள் :

ராஜேந்திரா & கம்பெனி,

(H. O.) 5/106, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

Manufacturers :

M/s. TEXTOOL COMPANY, LTD.

Ganapathi, P. O. Coimbatore.

கிளைகள் :

11/4 பாண்டி ரோட், விழுப்புரம்.

8/B, சிட்டுக்கோயில் தெரு, சேலம்.

கோவை உயர் திரு,

A. T. தேவராஜ முதலியார்

அவர்களின் திருப்பணியும், அன்னாரின் வாழ்க்கைக் குறிப்பும்

உயர் திரு ராவ் பகதூர் எ. டி. திருவேங்கடசாமி முதலியாரவர்கட்கும் இரத்தினம்மாள் அம்மையார்க்கும் கடைசியாகவும் மூன்றாவது மகனாகவும் 1891-ம் ஆண்டு நவம்பர் இரண்டாந் தேதியன்று வள்ளண்மை வாய்ந்த A. T. தேவராஜ முதலியாரவர்கள் பிறந்தார்கள். இன்றைக்கு எண்பது ஆண்டுகட்கு முன்னர் பெங்களூரினின்றும் கோவையில் வந்து குடியேறியது தேவராஜனாரின் குடும்பம். கௌரவமும், கண்ணியமும்; மதிப்பும் நீண்ட புகழும் வாய்ந்த பழம்பெரும் குடும்பத்தினரான தேவராஜ முதலியாரவர்களின் பாட்டனார் ஆர்க்காடு தோப்பை முதலியாரெனப் படுவார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையிலே பங்கனூர்; மத்தூர், போத்தனூர் முதலிய இடங்களிலே அன்னார் கட்டுவித்த சத்திரங்கள் இன்னும் அவரை நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றன. அவரின் வழி வந்த திருவேங்கடசாமி முதலியாரவர்களும் அவரினும் சிறந்த பரோபகாரியாவார். இவர் கோவை நகர சீர்த்திருத்தத்திலேயே நாட்டங் கொண்டு பலசேவைகள் புரிந்தார். அதன் காரணமாக 1900-1909 வரை நகராண்மைக் கழகத் தலைவராய்த் திகழ்ந்தார். இவரது தர்ம கைங்கர்யத்தைக் கண்டு 1897-லும் 1903-லும் இவருக்கு அரசாங்கத்தாரால் மரியாதை நற்சாட்சிப் பத்தி

A. T. தேவராஜ முதலியார்

ரங்கள் வழங்கப்பட்டன. 1911-ம் ஆண்டில் டில்லி தர்பார் பதக்கம் நமது முதலியாருக்குத் வழங்கப்பட்டது.

கோவை அரசியலார் ஆஸ்பத்திரியிலே சிசு சம்ரட்சணை வார்டொன்றைக் கட்டி உதவிய பெருமை திரு வேங்கடசாமியாரையே சாரும். ஏ. டி. இலட்சுமணசாமி முதலியார், ராவ்பகதூர் கிருஷ்ணசாமி முதலியார், ஏ. டி. தேவராஜ முதலியாரென மூன்று மக்களைப் பெற்றெடுத்த திருவேங்கடசாமி முதலியாரவர்கள் 1902-லே சிசு சம்ரட்சண வார்டைக் கட்டி முடித்தாரல்லவா? 1926-லே கோவை நகரம் விசாலமாக்கப்பட்டதால் அதிகப் படுக்கைகளை அளித்து உதவிய பெருமை இம் மூன்று சகோதரர்களுக்குரியனவாம்.

1923-ம் ஆண்டிலே தேவராஜ முதலியார் அவர்கள் சிவசமுத்திரம் ஜாகீர்தார் ஜனோபகார கர்த்தா T. R. அனந்தராய முதலியாரவர்களின் மகளான சௌ. சுந்தரபாயம்மையாரை மணந்தார். பரம்பரையாக வந்த வள்ளண்மை தேவராஜரிடம் மிகுதியாக அமைந்தது.

1931-ம் ஆண்டு F. J. ஸ்டேன்ஸ் அவர்கள் தலைமையிலே நடந்து வந்த கிராம சமூக வைத்திய சமாஜத்திலே சேர்ந்துதானும் பணியாற்றினர். முன்னாள் மந்திரியாக இருந்த டாக்டர் குருபாதம் அவர்கள் இச்சமாஜத்தின் முக்கிய வைத்திய நிபுணராய் இருந்தார்கள். ஆஸ்பத்திரியில்லாத கிராமங்களுக்கு வாரத்திற்கொருமுறை ஒரு டாக்டருடனும் கம்பவுண்டருடனும் சென்று நோயால் வாடும் ஏழை மக்களுக்கு இலவசமாகச் சிகிச்சையும் மருந்துமளிப்பதே இச்சமாஜத்தின் வேலை.

1933-லே பாகப் பிரிவினை ஏற்பட்டதும், குறிச்சியில் 7 ஏக்கர் நிலத்தை வாங்கி சிசு சம்ரட்சணை விடுதிகட்ட நினைத்தார். விடுதியை கட்டிக் கொண்டிருக்கும் தருவாயில் இங்கிலாந்திலிருந்து எதிர்பாராத விதமாகப் பஞ்சாலை இயந்திரங்களுக்கு ஏஜெண்டாகும் நிலை ஏற்பட்டது. விடுதி கட்ட வேண்டிய வட பாகத்திலே லோடஸ்மில்லொன்றை நிறுவி, அங்கோர் குக்கிராமத்தையும் ஏற்படுத்தினர். போஸ்டாபீஸ், தொழிலாளிகட்காக ஓர் பள்ளிக்கூடம், தண்ணீர், கடை முதலிய வசதிகளுடன்கூடிய எழுபது வீடுகளை அங்கே நிறுவி 18-9-34 அன்று தன் மனைவியின் நினைவாக அக்கிராமத்திற்குச் சுந்தராபுரம் எனப் பெயரிட்டார். வேணுகோபால், கணபதி, பாலசுப்ரமணியம் இம் மூன்று கடவுள்களடங்கிய திருமூர்த்தி ஆலயமொன்றும், நவக்கிரகக்

கோயிலொன்றும் பின்னர் முறையே சிருஷ்டிக்கப்பட்டன. சுந்தராபுரம் ஒரு கிராமத்திற்கு வேண்டிய சகல வசதிகளுடன் விளங்கலாயிற்று.

1935 சரோஜா மில் ஒன்றை நிறுவி அதற்குத் தானே தலைவராய்த் திகழ்ந்தார்.

1936-ல் லோடஸ் மில்லை ஒரு கூட்டுறவு ஸ்தாபனமாக்கி 1945 நவம்பர் வரை தானே நிர்வாகத் தலைவராய்த் திகழ்ந்தார். தொழிலாளிகட்கும் நிர்வாகஸ்தர்களுக்கும் நல்லுறவு கெடாதபடி முதலியாரவர்கள் ஆலையைக் கண்காணித்து வந்தார். டீ வியாபார ஸ்தாபனத்தின் மூலமாக முதன் முதலாக டீயைத் தொழிலாளிகட்கு வழங்கிய பெருமையும், மில் தொழிலாளிகட்கு ஆலையினருகே குடியேற்றக் கிராமத்தை உண்டாக்கி அளித்த தன்மையும் முதலியாரவர்களையேசாரும்.

உடல் நலமின்மையால் லோடஸ் மில் நிர்வாகத்திலிருந்து 1945 நவம்பரில் ஓய்வெடுத்த முதலியாரவர்கள் தனிப்பட்டவனாகை இருந்து சமூகத்திற்குத் தன்னை எப்படி அர்ப்பணிப்பதென்று சிந்திக்கலானார். போத்தனூர் கிறிஸ்துவ ஆலய எல்லைக்குள் கிடைத்த ஒரு பரந்த தாழ்வாரத்திலே தன் மகளின் நினைவார்த்தமாக "பிரேம குமாரி ஹால்" என்ற ஒரு சிறு வைத்திய விடுதியை நிர்மாணித்தார். திருப்பதி தேவஸ்தானத்திற்காகத் திருப்பதி மலையிலே அருமையான முசாபரி பங்களா ஒன்றைக் கட்டி உதவியுள்ளார். கோவை அர்ச் பிரான்சிஸ் கான்வென்ட் பள்ளிக்கூடத்திற்காக மான் டெஸ்ஸோரி வகுப்பொன்றை நிர்மாணித்துள்ளார். இன்று 101 பிள்ளைகள் அதில் பயிற்சி பெறுகின்றனர். அதே பள்ளியிலே ஏழை மாணவிகளுக்காகத் தன் தாயான இரத்தினம்மாள் பெயரிலும், மனைவியான மாது ஸ்ரீ சுந்தரபாயம்மாள் பெயரிலும் உபகாரச்சம்பளம் பெற்றுப் படிக்கும் படியான இவ்வசதிகளையும் செய்துள்ளார். தான் பிறந்த சமூகமான துளுவ வேளாளர் வகுப்பிற்காக வருடமொன்றுக்கு 500 ரூ. துளுவ வேளாளர் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க வசதியும் செய்துள்ளார்.

1947-ல் பேடன்பவுல் வாலிபச் சாரணரியக்கத்தின் மாவட்ட ஆணையாளராகத் திகழ்ந்தார். 1947-48-ல் சென்னைத் தலைமை நிலையத்தின் துணைத்தலைவராய் பணியாற்றினார். பாரத் சாரண வழிகாட்டி இயக்கத்தின் மாவட்ட ஆணையாளராகவுமிருந்தார்.

1946-ஆம் ஆண்டில் கோவை இராமனாதபுரத்தில் 6 ஏக்கர் நிலம் வாங்கி சிசுசம்ரட்சண-தாய்மை நிலையத்தை நிறுவ எண்ணினார். இங்கு விளக்க முடியாத சில காரணத்தால் அந்நோக்கம் தடைப்பட்டது.

1950-ல் முன்னாள் சர்ஜன் ஜெனரலாயிருந்த டேவிட் அவர்களும் ஜில்லா வைத்திய அதிகாரி S. பாலசுப்ரமணியமும் முதலியாரவர்களிடம் கலந்து பழகி சுமார் 1 லட்சம் ரூ. செலவில் க்ஷயரோக ஆஸ்பத்திரி ஒன்றை கோவைப் பெரிய ஆஸ்பத்திரி முன்னிலையிலே கட்டப்பட்டது. பயங்கர நோயான இந்தச் க்ஷயரோகத் தடுப்பு நிவாரணத்திற்கு தேவராஜனார் அளித்த லட்ச ரூபாய்களை கோவை மக்கள் என்றும் மறக்க முடியாது.

மனிதாபிமான நோக்கத்தோடு பெருவுள்ளம் படைத்த சமூகப் பெரியாரான தேவராஜனார் நீண்டு வாழ தமிழன்னையை மனமொழி மெய்களால் இறைஞ்சுகின்றோம்.

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்.

—திருக்குறள்



இது 1 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட
க்ஷயரோக ஆஸ்பத்திரி — கோவை.

எல்லாவித இன்ஷ்யூரன்ஸிற்கும்
எம்மிடம் ஆலோசனை பெறுக!

வான்கார்டு

பாலிஸிதாரர்களுக்கு மிக்க குறைந்த பிரிமியம் விகிதங்களும், உடனடியான, திறமையான சேவையும், தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் வழங்குவதே எமது குறிக்கோள்.

வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
வான்கார்டு பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
'வான்கார்டு ஹவுஸ்' 11-12, செகண்ட்லைன் பீச்சு, **மதராஸ்-1.**

பயனீர் பயர் & ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிட்.

தலைமை ஆபீசு: கோயமுத்தூர்.

★

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் மற்றும் லாபகரமான ஏஜென்சி நிபந்தனைகள் பற்றிய விவரங்களுக்கு எழுதவும்.

கலெக்டர்

திரு. ராயப்பா அவர்கள்

"கலெக்டர் ராயப்பா" என்ற திருப் பெயர் கோவை மாவட்ட வரலாற்றிலே— மக்கள் வாழ்க்கை சரிதத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் தகுதி பெற்று விட்டது. **"ராயப்பர்—ஏழை மக்களைக் காக்க வந்த நல்லப்பர்"**



திரு. ஈ. பி. ராயப்பா அவர்கள்

என்று நன்றி விசுவாசத்துடன் நகர பாட்டாளி மக்களும் கூறி மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றனர். அதிகாரி என்றால் "மக்களை அதிகாரம் செய்பவர், வரி தண்டுபவர்" என்ற தவறான எண்ணம் மாறி, "அதிகாரி மக்கள் ஊழியர்— மக்கள் நல்வாழ்வுக்கு வழிவகுத்துத் தருபவர்—சுக வாழ்வுக்கு

உதவிபுரிபவர்" என்ற நல்லெண்ணம் ஏற்படச் செய்த சிறப்பு திருவாளர். ஈ. பி, ராயப்பா, எம். பி. இ. (Milt) அய். எ. எஸ். அவர்களுக்கே உரித்தாகும்.

கோவை மாவட்டம், கடந்த கால் நூற்றுண்டாக, காலா காலத்தில் சரியான பருவ மழையின்றி, விளைச்சலின்றித் தவித்த பஞ்ச வட்டாரம்; குடியானவர்களும், நெசவாளிகளும் வேலையின்றிப் பட்டினிகிடந்து தவித்தனர்; அடிக்கடி நீண்டநாட்கள்.

"இந்தப் பஞ்ச நிலைமையை ஒழிக்க முடியாது, எப்போதும் நீடித்து இருந்துதான் தீரும்" என்று பெரும்பாலோர் கருதினர்கள். ஆனால் இந்த எண்ணத்தைப் பொய்ப் படுத்தி விட்டார் நிர்வாக வல்லுநர் கலெக்டர் ராயப்பா அவர்கள்.

கோவை பஞ்ச நிலைமையை இவர் சமாளித்ததற்குக் காரணம், இவர் பல வட்டாரங்களில், பல துறைகளிலும் உத்தியோகம் வகித்து நல்ல அனுபவம் பெற்றவர். மிலிட்டரி பீரங்கிப் பட்டாளத்தில் மேஜர் என்னும் பதவியில் இருந்தார். முதலில் இவர் அடுத்து நரசப்பூர் சப் கலெக்டராய் நியமிக்கப் பட்டார். பின்னர் சென்னையில் செக்ரட்ரியேட்டில் துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டார். (Deputy Secretary) பின்னர் ரெவின்யூ இலாக்கா டெப்டி கமிஷனர், வர்த்தக அதிகாரி முதலிய பதவிகள் வகித்தவர்.

நெசவாளர்களுக்கு உதவி

கோவை கைத்தறி நெசவாளர்கள், வீடின்றித் தவிப்பது கண்டு அவர்களுக்கு வீடுகட்ட இடம்; வசதி செய்து கொடுத்தார். மற்றும் தறிகாரர்களை நேரிடையாகச் சந்தித்து, அவர் அவர்களுடைய குறைகளைக் கேட்டு, விசாரித்து, அவரவர்களுக்கு ஏற்ற வகையில் உதவி புரிந்தார். உணவு, உடை முதலியவும் தொழில் நடத்துவதற்குப் பணவுதவியும் செய்தார். ஓர் நெசவாளி தனக்கு ரூ. 50 கிடைத்தால் தறி வாங்கித் தொழில் நடத்திப் பிழைத்துக் கொள்வேன் என்று விண்ணப்பித்துக் கொண்டான். திரு ராயப்பா, உடனடியாக அவர் கேட்ட பணத்தைக் கொடுத்து, அவன் பிழைப்புக்கு வழி செய்தார். ஆண்களுக்கு மாத்திரமின்றி முக்கியமாகப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இவர் அதிக உதவி செய்தார். சேலை உடை முதலியன அளித்தார். இவருடைய கவனம், நகர மக்கள், கிராம மக்களுடன் நின்றுவிடவில்லை. மலைகளில் வசிக்கும் மலைவாசியர்க உள்ள பழங்குடிகளின் நலத்திலும் அதிக அக்கரை கொண்டார். மானுப்பட்டி, ஆனைமலை, டாப்சிலிப், மலை வாசிகளுக்கு (மலசர்கள்) துணி, மணி, உணவு தந்து உதவினர்.

அனுதைகளுக்கு

கோவையில் அனுதை விடுதி ஒன்று ஏற்படுத்தி நூற்றுக் கணக்கான ஏழைகளுக்கும் குழந்தைகளுக்கும் உதவினர்.

ஹரிஜனங்கள் பால் பரிவு

அவினுசி தாலூக்கா, நம்பியாம் பாளையத்திலுள்ள காப்பிக் கடை, குமாரசாமிக் கவுண்டர் என்பவர் கடையில் வந்து காப்பி குடித்த, ஹரிஜனே இம்சை செய்ததாக தகவலறிந்த கலெக்டர் ராயப்பா, விரைந்து கவனம் செலுத்தி அப்பழங்குடி மகனுக்கு நியாயம் கிடைக்கச் செய்தார். டி. எஸ். பி-க்கு அறிவித்து, அந்தக் கடையைப் பறிமுதல் செய்யச் செய்ததுடன் மற்றும் வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கச்செய்தார்.

ராயப்பாபுரம்

கோவை நகர், தடாகம் பஸ் நிலையத்திற்கு அண்மையில், காலேஜ் வழியில், நெசவாளர் குடியிருப்பதற்காக 40 வீடுகள் கட்டப்படுவதற்கு இவருடைய உதவியே காரணம்.

எனவே இந்தப் பொது நலச் செல்வரின் பெயரால் "ராயப்பாபுரம்" என்று அந்த நெசவாளர் காலனிக்கு பெயர் இடப்பட்டது. மற்றும் வெளியூர் நெசவாளர்களுக்கு வேலை கிடைக்கும் வரை, கஞ்சித் தொட்டியும் ஏற்பாடு செய்தார்.

அடுத்து ஆலைத் தொழிலாளர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்து கொடுத்தார். லட்சுமி மில்லுக்கருகில் கீழ்ப்புறமுள்ள காலியிடத்தில் 60 வீடுகள் கட்டிக் கொள்ள ஏற்பாடு செய்தார்.

பஞ்ச வட்டாரங்கள்

உடுமலைப் பேட்டை, தாராபுரம், பல்லடம், வட்டாரங்களில் கடும் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருந்தபோது மராமத்து வேலைகள் பலவற்றைத் தொடங்கி அவ்வட்டார மக்களுக்கு வேலை தந்தார். இவ்வகையில் பல ஆஸ்பத்திரிகள் மராமத்து செய்யப்பட்டதுடன் பல கிணறுகளும் வெட்டப்பட்டன.

மற்றும் வேலை செய்யவியலாதவர்களுக்குக் கஞ்சித் தொட்டிகளும், குழந்தைகளுக்குப் பாலும் வைட்டமின் பில்சும், கொடுத்துதவினர். மேலும் அக்குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கவும் பள்ளிக்கூடங்கள் ஏற்பாடு செய்தார்.

வேலையின்றித் தவித்த வாலிபர்களை ராணுவத்தில் சேர்த்தார். விவசாயப் பண்ணைகளும் ஏற்படுத்தி குடியான மக்களுக்கு வாழ வழி செய்தார்.

மற்றும் பொதுநலத்தையே தன் வாழ்க்கை லட்சியமாகக் கொண்டவர். கள்ளமார்க்கட் ஊழல்காரர்கள் பலரைக் கண்டு பிடித்துத் தண்டனையடையச் செய்தார்.

காங்கயத்தில் ஓர் அனாதை விடுதியையும், ஓலப்பாளையம் கொடுவாய் முதலிய ஊர்களில் மருத்துவ விடுதிகளும், சிசு பராமரிப்பு விடுதிகளும் ஆரம்பித்து வைத்தார்.

கோவை மாவட்ட ஏழைகளின் ரட்சகரான இவரது உதவி நீடித்திருக்கவியலாது போய்விட்டது. இவர் கலெக்டர் பதவியிலிருந்து சென்னை ஜவுளிக் கமிஷனராகவும், (Director of Industries, Fisheries & Controlled Commoditees Madras) நியமிக்கப்பட்டதால், இவர் பிரிவால் ஏழை மக்கள் பலர் பசுவைப் பிரியும் கன்றுபோல் கண்ணீர் வடித்தனர். 27-10-53 மாலை 6-30 மணிக்கு கோவையில் ரயில் நிலையத்தில் இவருக்குப் பொது மக்களால் பிரிவுபசாரம் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கில் மக்கள் குழுமியிருந்தனர். நூற்றுக்கணக்கான மாலைகளை அணிவித்துத் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். ரயில் புறப்படும்போது வாழ்த் தொலி முழக்கங்கள், ராயப்பா வாழ்க,! ராயப்பாவுக்கு ஜே! என்று கடல் போல் ஒலித்தன.

இதே போல் கோவை மாவட்டம் நெடுகவுள்ள ரயில் நிலையங்களில், முக்கியமாக திருப்பூர், ஈரோடு, ரயில் நிலையங்களில், பல்லோர் இவரை வந்து கண்டு, மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்திப் பிரியா விடைபெற்றனர்.

குறிப்பு: இவரது வாழ்க்கைத் துணைவியார் ஸ்ரீமதி ஆஞ்சலீலா அம்மையார் அவர்களும் தன் கணவரது வழியை யேபின்பற்றி பொதுமக்கள் வாழ்க்கை பலதுறைகளிலும் மேன்மையுற, பலவகைகளிலும் ஈடுபட்டுத் தொண்டாற்றி பெயர் பெற்று, மக்களின் நல்வாழ்த்துக்கு உரியவரா யிருந்தார்.

கோவை அனாதை விடுதியிலும், செஞ்சிலுவை சங்கத்தி லும், ஓலப்பாளயத்தில் ஓர் அனாதை விடுதி ஏற்படுத்தி அதற்கு ஒரு பெண் டாக்டரை நியமித்தும் ஏழை மக்களுக்கு மிகுந்த சேவை செய்து பாராட்டும் பெற்றார். கோவை ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்களிடமிருந்து ஆம்புலன்ஸ் மோட் டார் ஒன்றும் பெற்று அதன் உதவி கொண்டு பல துறையில் பணியாற்றி மக்கள் நற்பயனடைய பெரிதும் உதவினார்.

—(ந.நி.)

A. B. T. பஸ் சர்வீஸ்

பொள்ளாச்சி

(ஆசிரியர்)

தன் உழைப்பால், தன் முயற்சியால், ஊக்கத்தால், நிர்வாக ஆற்றலால் உயர்வுற்ற உத்தமர் பொள்ளாச்சி உயர் திருவாளர், P. நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்கள், ஏழ்மையின் அடிப்படியிலேயிருந்து செல்வக்கோபுரத்தையடைந்த உழைப்புச் செல்வர். முயற்சிதான் இவருக்குத் திருவினையாக்கிற்று. பெரும் படிப்பாளியல்ல, ஆயினும் மேனாட்டுத் தொழிலை, மேனாட்டு முறையிலே நிர்வகித்தார். பிற தொழில் மேதைகள் வியக்கும்படி, சாதாரண மக்கள் சாதிக்க வியலாததை இவர், சாதாரண முறையிலே பாடுபட்டுச் சாதித்து விட்டார். தென் கொங்கு நாட்டு மோட்டார் போக்குவரத்து மன்னராய் விளங்குகிறார். இப்போது, இத்துறையில் இவருக்கு அடிநாளிலிருந்து உறுதுணையாக விளங்கிய நண்பர் திரு. S. விஜயராகவன் B. A. B. L., அவர்கள்.

திருவாளர் P. நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்கள், சிரித்த முகத்தினர், சிங்காரப் பேச்சினர், தொழிலாளர்களுடன் ஒரு தொழிலாளியாகப் பழகி, பாடுபட்டு, ஆதரவு பெறும் திறமைசாலி. பிற தொழில் முதலாளிகளுக்கு இல்லாத சிறப்புப் பண்பு இது.

இவர் முதன்முதல் ஒரு சில மோட்டார் பஸ் வாங்கி பொள்ளாச்சிக்கும் உடுமலைப் பேட்டைக்கும் இடையே, பிரயாணப் போக்குவரத்து நடத்தினார். இவரே டிரைவராகவும் துவக்கத்தில் இருந்ததாகக் கேள்வி. நாளடைவில் பஸ்களின் எண்ணிக்கை வளர்ந்தது. தென்வட்டாரப் பகுதிகள் பலவற்றிற்கும், மலைப்பகுதிகளுக்கும் பஸ் வசதிகள் கிடைத்தது. இவரது பொதுநலப் பணியால், இவரது நிர்வாகத்திறமையும், இவரால் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியும் இவருக்குப் பொதுமக்களின் - பணம் படைத்தோரின் ஆதரவை வலிய கூட்டுவித்தது.

ஏ. பி. டி. லிமிடெட் என்ற பதிவுக் கூட்டுக் கம்பெனி உதயமாயிற்று.

மேனுடு சென்று நிர்வாக அனுபவம் பெற்றுத் திரும்பிய மோட்டார் மன்னர்; "தமிழ்நாட்டு நப்பீல்டு பிரபு" என்று பாராட்டுதலைப் பெற்ற திரு, G. D. நாயுடு அவர்கள் பெரும் படையான பஸ்களை நடத்திவந்த அந்தச் சமயத்தில், தென் கொங்கு வட்டாரத்தைத் தவிர்த்து வேறு நாட்டுக்கும், வேறு தொழில் நகரத்திற்கும், சென்று தொழில் இரகசியங்களை அறிந்துவராத திருவாளர் P. நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்கள் யு. எம். எஸ்-க்கு நிகராகத் தமது நிறுவனத்தையும் ஆக்கினுர். மற்றும் தமது கம்பெனியை U. M. S. ஐவிடத் திறமையுடன் நடத்தி U. M. S. உரிமையிலிருந்த பஸ்ரூட் இரண்டை விலைக்கு வாங்கினுர். (திருப்பூர் to பொள்ளாச்சி, கோயமுத்தூர் to பொள்ளாச்சி)

இன்று இந்தக் கம்பெனியின் பஸ்கள் (A. B. T.) 130 வரை பொதுப்பணியாற்றி வருகின்றன, பெருமிதத்துடன்.

மனிதர்கள் போக்குவரத்துக்கு மாத்திரமின்றி, மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான சாமான்கள் போக்குவரத்திற்கும் வசதி செய்துள்ளார் - பலப்பல லாரிகள் மூலம்.

கோவை ஜில்லாவில் உடுமலை - பழனி - பொள்ளாச்சி - கோவை - தாராபுரம் - திருப்பூர் - பொள்ளாச்சி - ஆனமலை முதலிய இடங்களுக்கு ஒழுங்காக பஸ்கள் சென்று வருகின்றன.

மற்றும் கோவை நகரத்திலும் 30 டவுன் பஸ்கள் ஓடுகின்றன.

அன்புள்ள நிர்வாகத் தலைவர் - பொது மக்கள் வசதியில் அக்கரை கொண்டவர். ஆகவே பாட்டாளிகளும், பொது மக்களும் இந்தப் போக்கு வரத்துக்கு நல்ல ஆதரவும் அக்கரையும் காட்டி வருகின்றனர். (மதுரையில் T. V. S. பஸ் சர்விஸ் போன்று) பழுதில்லாத பஸ்கள் - பிரயாணம் முடிந்து இடையை அடைந்ததும் பஸ்கள் சோதனையிடப்பட்டு பழுதுகள் ஏதாவது நேரிட்டிருந்தால் உடனுக்குடன் பார்க்கப் படும். மற்றும் இடைவழியில் பிரயாணிகள் சவுகரியத்தைக் கவனிப்பதற்காக-அதிகக் கும்பலை ஏற்றிப் பொது மக்களுக்கு சவுகரிய குறைவு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்காக ஒவ்வொரு பாதையிலும் ஆங்காங்கு தணிக்கையாளர்களும் (Checking Inspector) நியமிக்கப் பட்டுள்ளனர். பொள்ளாச்சியிலுள்ள தலைமை அலுவலக நிர்வாகிகளில், மானேஜர், திரு. K. R. மாரியப்பபிள்ளை, காஷியர், திரு. வெங்கடாசல

ஆச்சாரியார், திரு. அழகப்பகவுண்டர், கோவை - மானேஜர், திரு ராமராவ் ஆகியவர்கள் முக்கியஸ்தர்களாவர். மற்றும் அலுவலக நிர்வாக மேலதிகாரிகள் மாத்திரமன்றி, திரு கவுண்டர் அவர்களும், அவ்வப்போது ஒவ்வொரு ஊருக்கும் சென்று வசதிகளைக் கவனிப்பார். பாட்டாளிகளின் உழைப்புக் கேற்றபடி அதிக ஊதியம் தருவார். மற்றும் அதிக சம்பளம்-போனஸ், போராட்டங்களுக்கும் இவர் இடம் வைத்துக் கொள்ளார். 6 மாத சம்பளம் போனசாகவும் தீபாவளிக்குப் பாதி சம்பளம் அன்பளிப்பாகவும், மற்றும் பல வகைகளில் பாட்டாளிக்கு உதவி புரிபவர், விருந்து புறத்திருந்தால் வரவேற்று உபசரித்து உண்பிக்காது, தானுண்ணு வள்ளல் மிகு நாடு கொங்கு நாடு. இந்தக் கொங்கு நாட்டின், கொங்கர் குலக்கோன் - தாளாண்மையில்லா வேளாண் குலத்தினர் திருவாளர் நாச்சிமுத்துக் கவுண்டரவர்கள். எனவே, கொங்கு நாட்டுச் சிறப்புரிமையான வள்ளலாகவும், கருணைச் சித்தம் இனம் தழுவும் நற்பண்புகள் இவரிடம் முழு அளவிற்கு அமைந்துள்ளன.

"குடி தழுவிக் கோலோச்சும் மன்னன் அடி தொழுது வாழும் உலகு" என்ற திருக்குறளின் சிறப்புச் சித்திரம்-உதாரணம் இவராகும். சிப்பந்திகள் மனக் கருத்தறிந்து நடக்கும் சிறந்த குணம் இவரிடம் இருப்பதும், அனைவரும் இவரை விரும்பி மதிப்புடன் நடத்துகின்றனர். இவரது திருக் குமாரர் திரு. N. மகாலிங்கம் B. Sc. சென்னை சட்ட சபை உறுப்பினர். (M. L. A.) கண்ணிய சீலர். உதவிப் பண்பினர். தந்தை எவ்வழி, அவ்வழி மகனும், என்ற சிறப் பிலக்கணத்திற்கு உரியர். பொது மக்களிடையே நல்ல செல்வாக்கும் நன்மதிப்பும் பெற்றவர். பொள்ளாச்சி தொகுதி மக்களுக்கு நலம் பல புரியும் நல்லாட்சியாளர், சரள நட்பினர்.

(தொடரும்)

முக்கிய அறிவிப்பு

தையல் மெஷின்களுக்கு வேண்டிய எல்லாவிதச் சாமான்களும் கிடைக்கும்; தவிர துணியால் பிரஸ் பட்டன்கள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு :- N. R. **வெங்கிட்டரமணராவ்**

254, ராஜா தியேட்டர் பில்டிங், N. H. ரோடு

கோயமுத்தூர்.

வருகையை எதிர்கொண்டு அழைக்கும்

"சேகர் கபே"

18, பிரான்ஸிஸ் ஜோசப் தெரு,

(லாகாலேஜ் எதிரில்) மதராஸ்-1.

★

சேகர்ஸ் ஹாப்பி ஹோம்

போர்டிங் & லாட்ஜிங்

501, தங்கசாலை தெரு,

(சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில்)

பிராமணாள் காபி & சாப்பாடு ஓட்டல்

கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயார் செய்யும் நாவிற்கு நற்சுவை அளிக்கும் நானாவிதப் பலகாரங்களும், உள்ளம் உவகை கொள்ளும் உண்டியும், தங்குவதற்குக் காற்றோட்டமுள்ள அறைகளும் உள்ளவை.

★

Telephone : 55397 *Telegram Add :* Nermeei.

புரொப்ரைட்டர் :

B. D. கோதண்டபாணி செட்டியார்

6, ஆச்சாரப்பன் தெருவு,

கொத்தவால்சாவடி, சென்னை-1.

ருக்மணி குக்கர்

ஒன்றை வாங்கிப் புதிய முறையைக் கைக்கொண்டால் **சமையலைப்பற்றிய கவலை நீங்கும்.** உணவுப்பஞ்சம் உள்ள இக்காலத்தில் இது ஒரு வரப்பிரசாதம்.



ஒரு மணி நேரத்தில் ஒரே அடுப்பில் ஒருவித பிரயாசையும் இல்லாமல் சாதமும் 5 - விதப் பதார்த்தங்களும் தயார் செய்யலாம்.

சுமார் 1 முதல் 12 பேர்களுக்குத் தகுந்த 6 சைஸ்களில் கியாரண்டியுள்ள ஸ்டெயின்லஸ் ஸ்டீலிலும், பித்தளையிலும் குக்கர்களைத் தயாரிக்கிறோம்.

முக்கிய ஊர்களில் ஏஜெண்டுகள் உண்டு.

மற்ற விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விபர புத்தகம் இனாம் !

தயாரிப்பவர்கள் :

ருக்மணி குக்கர் கம்பெனி,

15, கிழக்கு மாதாகோயில் தெரு, இராயபுரம், மதராஸ்-13.

Tele Add : "KOTI ABBU" Phone : 2435

K. M. ABBU CHETTIAR & CO.,

Gingelly Oil Mills & Chamber Bricks Merchant,

No. 81, PERAMBUR BARRACKS ROAD, VEPERY POST,

MADRAS-7.

Branches at:

1. 44, Wall Tax Road, P. T. Madras.
2. 149, Mint Street, Sowcarpet, Madras.
3. 27, Malayappan Street, Mannady, Madras.
4. 35, Paper Mills Road, Perambur.
5. 8, Swami Pandaram Street, Chintadripet, Madras.
6. 15, Bazaar Road, Royapettah, Madras.
7. 9, Konnur High Road, Otteri, Madras.
8. 1, Narasinga Perumal Koil Steet, Choolai Madras.

MANUFACTURERS OF:

Pure Gingelly Oil in our own

PHINTO OIL MILLS

SUPPLIERS TO M. & S. M. RAILWAY, S. I. RAILWAY,

B. & C. MILLS WORKMEN STORES.

பாரதத்தின்
பெருமைதரும் பொக்கிஷம்
சிக்கனத்தில்
சிறப்பு
கவர்ச்சியொடு
கண்ணியம்
கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்
உயர் மதிப்பு நீடிய உழைப்பு
பார்வைப் பொலிவு விலை மலிவு
எல்லாம் பொருந்தியவை.
Co-optex
FABRICS
SOLD THROUGHOUT THE COUNTRY
THE MADRAS STATE HANDLOOM WEAVERS' CO-OP. SOCIETY LTD.
34. PANTHEON ROAD, EGMORE, MADRAS-8.

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம் — மேட்டுப்பாளையம் ரோடு,

கோயமுத்தூர்.

●

நாங்கள் 20, 40, 60, நெம்பர் பாவு நூல்
தயாரிக்கிறோம்.

* இந்திய மூலதனம்
* நல்ல டிவிடெண்ட்
* கல்வி தொழில் அனுபவம் நிறைந்த நிர்வாகம்.

●

மேனேஜிங் ஏஜண்ட்ஸ்:

N. அப்புசாமி நாயுடு & Co.,

மேனேஜிங் டைரக்டர்:

G. V. முத்துசாமி B. Sc.

கோபால்ட்
மோட்டார் சர்வீஸ் லிமிடெட்
மேட்டுப்பாளையம்.

●

தாராபுரம் & அந்தியூர்

தென்னிந்திய ரயில்வே அவுட் ஏஜன்ஸிகள்

நாங்கள்

1. திருப்பூர் & பழனி ரெயில்வே ஸ்டேஷன்கள் வழியாகத் தாராபுரத்திற்கும்
2. ஈரோடு ரயில்வே ஸ்டேஷன் வழியாக அந்தியூருக்கும்

அவுட் ஏஜன்ஸி சர்வீஸ்கள் நடத்தி வருகிறோம் என்று பொதுமக்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். இதர எல்லா ரயில்வே ஸ்டேஷன்களுக்கும் அவுட் ஏஜன்ஸிகளுக்கும், பிரயாணிகள், லக்கேஜ், பார்ஸல்கள், கூட்ஸ்கள் முதலியவைகளுக்கு நேராக ரயில்வே புக்கிங் வசதிகள் உண்டு.

கோபால்ட் மோட்டார் சர்வீஸ் லிமிடெட்.

மேட்டுப்பாளையம்
22—2—54

N. வீராசாமி செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.

Telegrams : STRENGTH. Phone : No. 465-A.

தி ஸ்டர்லிங்
ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி
லிமிடெட்டில் இன்சூர் செய்யுங்கள்.

*

இந்தியாவில் எல்லாவகை இன்சூரன்ஸ் திட்டங்களையும் ஏற்று நடத்தி, முன்னணியில் நிற்கும் ஸ்தாபனங்களுள் இது ஒன்று. பாலிசிதாரர்களுக்கு விசேஷ சலுகைகளும், ஏஜண்டுகளுக்கும், இன்ஸ்பெக்டர்களுக்கும், கவர்ச்சிகரமான நல்ல ஆதாயங்களும் அளிக்கப்படுகின்றன.

*

இதர முழு விபரங்களுக்கு எழுதுக:

சி. சுப்ரமணியம், பி. ஏ.,
கிளை மானேஜர்.

தி ஸ்டர்லிங் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி
லிமிட்டெட்.,

3/54, திருச்சி ரோடு, கோயம்புத்தூர்.

THE M. C. S. LIMITED

H. O. METTUPALAYAM

★

Out-Agency Contractors for Southern Railway at the following places

Viz

BHAVANISAGAR	for	Parcels and Goods
COONOOR	for	Goods only
ARUVANKADU		,,
OOTACAMUND		,,

Served via Mettupalayam Railway Station

Also available Lorries and Busses for Special occasions.

●

Apply to:

METTUPALAYAM OFFICE,

இந்திர பவனம்

போர்டிங் & லாட்ஜிங்

இம்பீரியல் பேங் ரோடு — கோயமுத்தூர்.

(ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம்)

கோவையிலே, புதிதாகச் சிறந்த முறையிலே ஏற்பட்ட போர்டிங் & லாட்ஜிங் ஓட்டல் இது ஒன்றே!

வெளியூர் அன்பர்கள், தங்க, குளிக்க மிக வசதியுள்ளது. சுகாதார முறையில்கூடிய அறைகள்.

சுத்தமான உணவும், சுவைமிகுந்த சிற்றுண்டிகளும், நேர்த்தியான பலகாரங்களும், நெய்யினால் செய்யப்பட்டவை.

அன்பர்களின் திருப்தியே, எங்களின் சேவை என மதித்து உயர்ந்த முறையில் ஆரம்பித்துள்ளோம்.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள், உண்மை புலனாகும்; வணக்கம்.

தங்கள் அன்பன்,

கோவை,
5—1—54.

Pro. V. R. சாமிநாதன்,
& பார்ட்னர்.

கோவையில் புதிய பிரியாணி ஓட்டல்

ஆனந்தமான உணவு ! அன்பான வரவேற்பு !!

மாடர்ன் மராட்டா ஹோட்டல்,

பிரியாணி & சாப்பாட்டு விடுதி

கர்னாடிக் தியேட்டருக்கு கீழ்ப்புறம், கோயமுத்தூர்.

சுவைமிக்க உணவும், நறுமணம் கமழும் ருசிமிக்க மட்டன் புலவு, பிரியாணி, குணமிக்க குருமாவும், அறுசுவையுடன் கூடிய பதார்த்தங்களும் இணையில்லாத முறையில், நளபாகத்தில் சிறந்த வெளியூர் ஆட்களைக் கொண்டு தயாரிக்கிறோம்.

N. B. எல்லா நாட்களிலும் கடை உண்டு.

பெரிய கடைவீதி,
கோவை.

Pro. M. R. கிருஷ்ணசாமி.

Telephone: 2894. Grams: EVEREST.

HOTEL EVEREST

(PROPRIETOR: S. K. SUNDARAM J. P.)

1 & 2, Poonthamalli High Road, MADRAS.

MOUNT EVEREST
The Peak of Perfections.

HOTEL EVEREST
The Perfect Boarding & Lodging House.

Situated between Madras Central & Egmore Station and on Bus, Train Electric Train Route. Well Ventilated

— 130 Airy Rooms. —

Our Branch :

LUXURY TYPE HOTELD, MADRAS.

கோவை முரசு வெளியீடுகள்!

(1) இதற்கா எங்கள் தியாகம்?

நமது ஆசிரியர் (தோழன்) அவர்களால் எழுதப்பெற்றது.
புத்தக வடிவில் பொலிவுடன் வெளிவருகிறது.

தனிப்பிரதி விலை 0—4—0

(2) அறிஞர் G. D. நாயுடு அவர்களின்
(ஜீவிய சரிதம்)

இதுவரை யாரும் வெளியிடாத பல அரிய
கருத்துடன் கூடியது
அழகிய பதிப்பு ஆசிரியர் அவர்களால் எழுதப்பெற்றது.

தனிப்பிரதி விலை 0—4—0

(3) "பாச வலை" (தொடர் கதை)

ஆசிரியை S. P. மீனாட்சியம்மாள் அவர்களால்
எழுதப்பெற்றது.

தனிப் பிரதி 0—8—0

வியாபாரிகளுக்கு 25% கமிஷன் உண்டு.

விபரங்களுக்கு :—

பாலு பதிப்பதிகம், சூலூர், P. O.
(கோவை ஜில்லா)

ஹோமியோபதி ஆஸ்பத்திரி, சூலூர்.

விஞ்ஞான ரீதியில் நூதனமான முறையில்
நிரந்தரமாக எல்லா வியாதிகளையும் வெகு
விரைவில் குணப்படுத்தப்படும். குழந்தை
களுக்குஇலவசமாக சிகிச்சைசெய்யப்படும்

டாக்டர், K. கோபால், M. D. M. S.

Editor & Published by S. P. Meenakshi Ammal, Sulur. Mg. Editor: S. A. Manickam.
Printed by Sri Kathiresan Press. Raja Street. Coimbatore.

கவுண்டர் & கம்பெனி லிமிடெட்

கூட்ஸ் ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

★

போர்டு, செவர்லெட்
மற்றும் இதர மோட்டார்களுக்கு
அவசியமான எல்லாச் சாமான்களும்
டயர்கள், டியூப்கள், பேட்டரி
வகையராக்களும் விற்பனை
செய்யப்படும்.

பஸ், லாரிகளுக்குப் பாடிகள் போட்டுக்
கொடுப்பதுடன் எல்லாவிதமான
மோட்டார் ரிப்பேர்களும் சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

நா. மகாலிங்கம்,
மேனேஜிங் டைரக்டர்.

P·A·R

அழகிய ஆபரணங்களுக்கு...

P.A. ராஜு செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர்

தந்தி: ராஜா · போன்: 268 · தபால் பெட்டி: 139.

Wrapper Printed at the Rajan Electric Press, Madras.1.